Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo 20000 Rs only 1st Year
CIMA-UK 14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1284) MCS
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 20 சனிக்கிழமை (03.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 154



கோழிக்கு தடை! 09

குருதிப் பற்றாக்குறையை நீக்க



04



இரத்தம் குடித்த சாமியார் 12

ஜெனிவா குழப்பம்?



10



# இன நல்லிணக்கமின்றி சமாதானம் ஏற்படாது

## இணைந்து செயற்பட அமெரிக்கா தயார்

(ஜெனிவா)

இலங்கையில் இன ஐக்கியம் மற்றும் நல்லிணக்கமின்றி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது என்று அமெரிக்காவின் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான செயலாளர் மரியா ஒட்டேரோ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பிந்திய வருடங்களில் இவ் விடயங்களில் இலக்கை எட்டுவதற்காக அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து செயற்பட்டதாகவும் தற்போதும் அவ்வாறு செயற்பட அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நேற்று உரையாற்றும் போதே போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் இலங்கை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். இறுதிக் கட்டப் போர் நிறைவுற்று மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இதற்கு மேலும் பொறுமை காக்க முடியாது. இலங்கை உடனடியாக ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயலில் கொண்டுவர வேண்டும் எனவும் மரியா ஒட்டேரோ தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பில் தாம் திருப்தி அடைவதாகவும் அவர் கூறியுள்ளார். ஐக்கியம், நல்லிணக்கமின்றி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## எயிட்ஸ் நோயின் தாக்கம் 3000 பேர் பாதிப்பு

(கொழும்பு)

எயிட்ஸ் நோயினால் நாடு முழுவதும் இதுவரை 3,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் இதுவரை 250 பேர் உயிரிழந்துள்ளதாகவும் எயிட்ஸ் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் என்.எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எயிட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களில் 52 பேர் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் என்றும், 1,463 பேர் ஓரினச் சேர்க்கையாளர்கள் அடங்குவதாகவும் அவர் கூறினார்.

மேலும் இந்நோயின் தாக்கம் 15 இற்கும் 49 இற்கும் இடைப்பட்ட வயதினரிடமே அதிகமாக காணப்படுவதாகவும், இதில் பாதிக்கப்பட்டவர்கள் மேல்மாகாணத்திலேயே (15 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டாவளை பகுதிக்கு 10 நாட்களில் மின்சாரம்

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலகம் வரையான பகுதிகளுக்கு எதிர்வரும் 10 நாட்களுக்குள் மின்விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மின்சார சபை உத்தியோகத்தர்கள் தமது மின்சார வேலைகளை துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றனர். எதிர்வரும் 10 நாட்களுக்குள் கண்டாவளைப் பிரதேச செயலகம் வரையான பகுதிகளுக்கு மின்விநியோகம் இடம்பெறும் அதேவேளை, ஏப்ரல் மாதத்திற்கிடையில் ஏ-35 வீதியூடான பகுதிகளுக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (கே)

## ஜேர்மன் பிராந்திய உறுப்பினர்களுடன் அமைச்சர் டக்ளஸ் விசேட சந்திப்பு



(ஜெனிவா)

ஜெனிவாவில் தங்கியிருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுடன் கட்சியின் ஜேர்மன் பிராந்திய தோழர்களும் அரசியல் முக்கியஸ்தர்களும் கடந்த திங்கட்கிழமை நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர். இக் கலந்துரையாடலில் கட்சியின் நிகழ்கால, எதிர்கால செயற்பாடுகள், தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினை சமூக, கலை, கலாசார பொருளாதார விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இதில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, ஜேர்மன் பிராந்திய அமைப்பாளர் தோழர் மாட்டின் ஜெயா, உதவி அமைப்பாளர் தோழர் செல்வம் தோழர்களான கமல் ஜெயசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இலங்கையில் இப்போது சுமுகநிலை பிரித்தானிய அரசு கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையில் சுமுகநிலை நிலவுவதாக பிரித்தானியா அரசாங்கம் அங்கீகாரம் வழங்கி உள்ளமை இன்றைய நிலையில் இலங்கைக்கு கிடைத்த சிறந்த நற்சான்றிதழாகும் என்று பதில் ஊடக தகவல் துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல் தஞ்சம் கோரிய 52 இலங்கையரை நாடு கடத்த எடுத்த நடவடிக்கையினூடாக பிரித்தானியா சிறந்த செய்தியொன்றை கூறியுள்ளது.

இலங்கையில் சுமுகமான சூழ்நிலை உள்ளதால் இலங்கைக்குத் திரும்ப அங்குள்ள இலங்கையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நீதிமன்றம் சென்றவர்களில் 52 பேரே இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கூட்டமைப்பு உறுதி; ஜெனிவா செல்வதில்லை

(கொழும்பு)

ஜெனிவா கூட்டத்தொடரில் பங்குகொள்வதில்லை என்று கூட்டமைப்பு மீண்டும் உறுதிபட தீர்மானம் மேற்கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். தற்போது ஜெனிவாவில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் விசேட படையணி இலங்கையிலும் செயற்படுகின்றது

(வொஷிங்டன்)

பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில் விசேட பயிற்சிபெற்ற அமெரிக்கப் படைப் பிரிவு ஒன்று இலங்கையில் பணிக்கமர்த்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் விசேட படைப்பிரிவு இலங்கை உட்பட தெற்காசிய நாடுகள் ஐந்தில் செயற்படுவதாக பென்டகனின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், மாலை தீவு ஆகிய தெற்காசிய நாடுகளிலேயே அமெரிக்காவின் விசேட படைகள் செயற்படுவதாக பென்டகன் அதிகாரியான அட்மிரல் றொபேட் வில்டட் தெரிவித்துள்ளார்.

இப்படைகள் பயங்கரவாதத்திற்கு எதிராக மிக உன்னிப்பாக செயற்படுவதாக அவர் தெரிவித்தார். முக்கியமாக இந்தியாவில் இவர்களின் பணி மிக முக்கியமானது. பாகிஸ்தானின் தலிபான் படைகள் மிகவும் அச்சுறுத்தல் மிக்கவை.

இவற்றிக்கு எதிராக செயற்படுவது மிகவும் சிரமமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிகரிக்கிறது எரிபொருள் மானியம்

(கொழும்பு)

சிறுமீன்பிடி படகுகளுக்கு மானிய அடிப்படையில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் அளவை 250 லீற்றரிலிருந்து 375 லீற்றர்களாக அதிகரிக்குமாறும், ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கான மானிய அடிப்படையிலான டீசலை 100 லீற்றர்களால் அதிகரிக்குமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

## கச்சதீவு உற்சவம் கோலாகல ஆரம்பம்



(கச்சதீவு)

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. இதனை முன்னிட்டு அங்கு திரளும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை நெடுந்தீவு பிரதேச சபையும், நெடுந்தீவு பிரதேச செயலகமும் கடற்படையினருடன் இணைந்து மேற்கொண்டிருக்கின்றனர். அத்துடன் பக்தர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் குடிநீர் விநியோகங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக நெடுந்தீவு (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மாவட்டத்தில் காணிப் பிரச்சினை கலந்துரையாடல்



கிளிநொச்சியிலமைந்துள்ள காணிகளின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள ஆளுநரின் உபசெயலகத்தில் இடம்பெற்றது.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காணிகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் காணிப் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண காணி ஆணையாளர் பி.தயானந்தன், பிரதேச செயலர்கள், காணி அலுவலர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# மின்கட்டண உயர்வு விபரம்

இலங்கை மின்சார சபை எரிபொருள் சீராக்கல் கட்டணத்தை 16.02.2012 இல் இருந்து மின்சாரக் கட்டணத்துடன் சேர்த்து பாவனையாளரிடம் அறவிடவுள்ளது.

| | எரிபொருள் சீராக்கல் கட்டணம் |
|---|---|
| 01. வீட்டுப் பாவனையாளர்கள் | |
| 00 – 30 (அலகுகள் / மாதம்) | 25% |
| 31 – 60 (அலகுகள் / மாதம்) | 35% |
| 60 இற்கு மேற்பட்டவை (அலகுகள் / மாதம்) | 40% |
| 02. கைத்தொழில் | 15% |
| 03. ஹொட்டல் | 15% |
| 04. பொது பாவனை | 25% |
| 05. அரச பல்கலைக்கழகமும் அரச தொழிற்பயிற்சி நிறுவனம் | 25% |

பின்வரும் பாவனையாளர்களுக்கு எரிபொருள் சீராக்கல் கட்டணம் விலக்கழிக்கப்பட்டுள்ளது. சமய தலங்களும் தர்ம நிறுவனங்களும், வீதி விளக்கு, அரசாங்க வைத்தியசாலை, அரசாங்க பாடசாலை, அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் பாடசாலைகளுக்கும் எரிபொருள் சீராக்கல் கட்டணத்திலிருந்து விலக்கழிக்கப்பதற்கு அந்நிறுவனங்கள் மின்சார கணக்கு இலக்கத்தைப் பிரதேச அலுவலகம் சுன்னாகத்திற்குச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விதிவிலக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பூந்தோட்டம் எரிவாயு மயானம் நகரசபையிடம் கையளிப்பு

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் மயானத்தில் அமைக்கப்பட்டு வந்த எரிவாயு மூலமாக சடலங்களை எரியூட்டும் மயானம் நேற்று முன்தினம் வவுனியா நகரசபையிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

எல்.ஜி.ஐ.ஐ.ரி நிறுவனத்தின் உதவியுடன் 35.5 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இம் மயானமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்று விறகு கட்டுப்பாட்டை போக்கும் வகையில் வட மாகாணத்தில் முதல் முதலாக வவுனியாவில் அமைக்கபட்டது தற்போது இப்பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளது.

வவுனியா நகரசபை தலைவர் ஐ.கனகையா கருத்துத் தெரிவிக்கையில் இம் மயானமானது நகரசபை மக்களுக்கு மட்டுமன்றி பிரதேச சபைக்குட்பட்ட மக்களுமபயன்படுத்தும் வகையில் தீர்மானம் கொண்டுவர உத்தேசித்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை மிக விரைவில் இம் மயானத்தினை மக்கள் பாவனைக்கு திறந்து விடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும தெரிவத்தார். (125)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட நலன் பாயச் சங்கத்தின் 11 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் ஜே.பி. கிறிஸ்தோபர் தலைமையில் வவுனியா தெற்கு பிரதேச செயலக வீதியில் அமைந்துள்ள நலனபாயச் சங்க மண்டபத்தில் இடம பெறவுள்ளது. (125)

# வன்னியில் நீதிமன்ற நடவடிக்கைகள் பொலிஸாருக்கு விசேட பயிற்சிகள்

(வவுனியா)

சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் வவுனியா, முலலைத்தீவு, மன்னார், கிளிநொச்சி பிராந்திய பொலிஸாருக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான விளக்கமளிக்கும் செயலமர்வொன்று நேற்று வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

குற்றச்செயல்கள் இடம் பெறும்போது அதனை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் முறை, வழக்கு தொடர்தல் மற்றும் நீதிமன்றத்தில் எவ்வாறான முறையில் வழககுகளை ஆவணப படுத்தல் போன்றவை தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் நீதி முறைமைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதி பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஆயிசா ஜினசேன, அரச சட்டத்தரணி சூசைதாஸ், கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் தலுவத்தை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சுதேச மருந்தகங்கள் திடீர் சோதனை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பின் பேரில் நேற்று திடீர் சோதனைக் குழுவினர் முடமாவடி, கல்வியங்காடு, அச்சுவேலி, கதிரிப்பாய் ஆகிய இடங்களில் சோதனைகளை மேற்கொண்டனர். மேற்படி பரிசோதனையில் ஏற்கனவே முன்னைய பரிசோதனைகளின்போது ஆங்கில மருந்துகளை பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்ட சிலர் மீண்டும் ஆங்கில மருந்துப் பாவனையில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இனிவரும் நாட்களில் இவ்வாறான திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருப்பதுடன் சுதேச மருத்துவ நிலையங்களில் ஆங்கில மருந்துப் பாவனை கணடுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொளளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (125)

# கச்சதீவு உற்சவத்திற்கு செல்பவர்களுக்கான அறிவுறுத்தல்

கச்சதீவு உற்சவம் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இந்த உற்சவத்துக்கு இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் வந்து கலந்துகொள்வார்கள். இந்தியாவில் மலேரியா நோய் பரவலாகக் காணப்படுவதால் உற்சவத்துக்குச் சென்று திரும்பிய பின் எவருக்காவது காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனையை செய்து கொள்ளுமாறு பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும், வீதி, அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதாலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின ஒருபகுதி ஆகிய இடங்களிலும் மின்தடை இடம்பெறும்.

செவ்வாய்க்கிழமை 06.03.2012 08.03.2012 வியாழக்கிழமை மற்றும் 10.03.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை தென்மராட்சிப் பிரதேசம், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின்தடை இடம்பெறும்.

07.03.2012 புதன்கிழமை, 09.03.2012 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில், 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கொட்டடி, நாவாநதுறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ். பிரதான வீதியில் பண்ணை முதல் பஸ்ரியன் சந்திவரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மினவிநியோகம் தடைப்பட்டிருக்கும்.

மேற்குறிப்பிட்ட மின்தடை பறறிய அறிவித்தலுக்கு மேலதிகமாக வீதி அகலிப்புப் பணிகளுககாக தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை, 06.03.2012 செவ்வாய்க்கிழமை, 08.03.2012 வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை இராஜ வீதியில் இருந்து கோப்பாய் சந்திவரை, கைதடி - மானிப்பாய் வீதியில் கோப்பாய் பிரதேசம் ஆகிய இடஙகளிலும் மின்தடை அமுல்படுத்தப்படும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## ஆன்மீக நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றது. நாளை காலை 10.30 மணிக்கு ஆலய சுற்றுப் பிரகார பூசைகள் நிறைவுற்றதும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் மகாபாராதம் தொடர் சொற்பொழிவு இடம் பெறும். தொடர்ந்து அன்னம் பாலிப்பு நிகழ்வும் நடைபெறும் என ஆச்சிரம மடாதிபதி செ.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.(116)

# முகமாலை மக்களுடன் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகமாலை கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான சந்திப்பொன்று இன்று காலை 10.00 மணிக்குப் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையின் தலைவரும் ஈ.பி.டி.பி: யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் மக்களின் குறைநிறைகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளதால் கிராம அலுவலர் பிரிவிலுள்ள சகல மக்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கே)

# தமிழ்த்தினப் போட்டிகள் இன்று

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரவெட்டி கோட்டத்திற்கான தமிழ்த்தினப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் பருத்தித்துறை கோட்டத்திற்கான தமிழ்த்தினப் போட்டி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையிலும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடம்பெறும்.

சகல எழுத்தாக்கல் போட்டிகளும் இன்று காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தெரிவித்துள்ளார.(116)

# ஐந்து மாத காலத்திற்குள் 32 பேர் கடத்தல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஐந்து மாதங்களில் 32 பேர் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் ஏழு பேர் கொழும்பு, மற்றும் புறநகரப்பகுதிகளில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஐவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை.இவர்களில் பெரும்பாலானோர் ஆயுததாரிகளால் வெள்ளை வானில் வந்தோராலேயே கடத்தப்பட்டுள்ளனர். வர்த்தகப் பெரும்புள்ளிகள், சமூகநல செயற்பாட்டாளர்கள், பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களே கடத்தப்பட்டவர்களில் அதிகமானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகிறோம்.
- காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## இதோ மீண்டும் ஒரு நாடகம்!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தெளிவான எந்த ஒரு திட்டமும் அவர்களிடமே கூட இல்லாததால்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு, அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில், அரசு தரப்பில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு மறுப்பைத் தெரிவித்துவிட்டு எழுந்து வந்துவிடுவதன் மூலம் ஒரு தேர்தலிலிருந்து மறு தேர்தல் வரைக்கும் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறது என்பது மக்களுக்குத் தெரிந்ததுதான்.

ஆனால், தமிழ்மக்களின் பாதுகாப்பிலும் அவர்களது சுபீட்ச வாழ்விலும் அவர்கள் கொண்டிருப்பதாகச் சொல்லும் கரிசனை என்பதும், வெறுமனே தங்களது அரசியல் வாழ்வுப் பாதுகாப்புக்காக மாறி மாறிப் போடுகின்ற வேஷம்தான் என்று கடந்த சில வாரங்களில் அவர்கள் காட்டிக்கொண்டிருப்பதை மக்கள் அவதானிப்பார்கள்.

கடந்த 26 ஆம் திகதிக்கு முன்புவரை, ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை பேரவை அமர்வின்போது, பன்னாட்டுப் பிரதிநிதிகளை சந்தித்து இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை வலியுறுத்தி அரசுக்கெதிராகத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடகங்களில் செய்திகளை வெளியிட்டு வந்தது.

இலங்கை அரசை குற்றவிசாரணையில் வீழ்த்த இந்த மாநாடு ஒரு பொன்னான வாய்ப்பு என்றும், தமிழ்மக்களுக்கான தீர்வைப் பெற்றுத்தர இதோ சர்வதேசத்தைக் கிட்ட இழுத்து வந்துவிட்டோம் என்றும், இந்த மாநாட்டைத் தொடர்ந்து தீர்வு வந்துவிடும், அதன் பிறகு நாமே எல்லா அபிவிருத்திகளையும் செய்துகொள்வோம், அதுவரை சலுகைகளையும் உதவிகளையும் சிங்கள அரசிடம் வாங்கி விடாதீர்கள், மார்ச் வரைக்கும்தான்.... தமிழுணர்வுடன் துன்பங்களைச் சகித்துக் கொண்டிருங்கள் என்றெல்லாம் வீரவுரைகளைக் கேட்டுக்கொண்டிருந்தோம், கடந்த 26 ஆம் திகதி வரை.

26 ஆம் திகதியன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஒரு திடீர் ஞானோதயத்தை அறிக்கையாக வெளியிட்டார். தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பை உத்தேசித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவா செல்லப் போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார். ஜெனீவா போய் இலங்கை அரசுக்கெதிராகச் செயற்படுவது, இலங்கையில் இருக்கும் தமிழ் மக்களையே பாதிக்கும். அது வீணாக மீண்டும் இனத் துவேஷத்தையும், தமிழ் மக்கள் மீதான வன்முறையையும் தூண்டிவிடுவதாகிவிடும் என்ற உண்மையைக் கண்டுபிடித்து மக்களுக்கு அறிவித்தார்.

அத்தோடு, ஜெனிவாவில் அரசுக்கு எதிரான அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால், அதனால் ஏற்படும் உள்நாட்டு அரசியல் நிலைமையை கூட்டமைப்பு எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என்றும் கேள்வி எழுப்பியது கூட்டமைப்புத் தலைமை. தமிழ்மக்களுக்குப் புல்லரித்திருக்க வேண்டும். மக்களுக்கு நேரக்கூடிய ஆபத்துக்களை முன்னுணர்ந்து தவிர்க்கும் தலைமை தமிழ்மக்களுக்கு இருப்பதை அறியும்போது புல்லரிக்காமல் இருக்குமா?

இதன்பிறகு கடந்த நான்கு நாட்களில் நடந்த திருப்பம்தான் பழையபடி சோகமானது. கூட்டமைப்பின் வாக்கு வங்கிக்கு ஆபத்து என அச்சப்படுமளவுக்கு எதிர்ப்புகள் எழுந்தன. சந்திரிகா தீர்வுப் பொதி காலத்தில் சம்பந்தனுக்குச் சூட்டப்பட்ட துரோகிப் பட்டம் மீண்டும் சூட்டப்பட்டது. சம்பந்தன் அவர்கள் அப்போது அடித்த பல்டியைப் போன்றே இப்போதும் அடித்தார்.

நேற்றைய பத்திரிகைகளில் மீண்டும் அவரது "இலங்கை அரசுக்கெதிரான தமிழ்வீரக் கடிதம்" வெளியானது. சர்வதேச சமூகம் போர்க்குற்ற விசாரணையை தீர்மானமாக எடுக்க வேண்டுமென 47 மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கும் கடிதம் எழுதி, மீண்டும் தமிழ்த் தேசிய வீரத்தை நிலைநிறுத்தி விட்டது கூட்டமைப்புத் தலைமை! வாக்கு வங்கியும் காப்பாற்றப்பட்டாயிற்று!

இப்போது தமிழ்மக்களுக்கு எழும் கேள்வி: ஜெனீவா போய் இலங்கை அரசைப் போர்க்குற்ற விசாரணையில் மாட்டி விட்டால், இனரீதியான வன்முறையுணர்வு தூண்டப்பட்டு இங்குள்ள தமிழ் மக்கள் பாதிக்கப் படுவார்கள் என்ற முன்னைய அக்கறை என்னவாயிற்று? இங்கிருந்துகொண்டே ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கெதிரான தீர்மானத்தை வலியுறுத்தினால், நமது மக்களும் அவர்களுக்கான தீர்வும் பாதிக்கப்பட மாட்டாதா?

- ஆசிரியர்

# மன்னார் கடை எரிப்புச் சம்பவம்
# வன்முறைகளைத் தூண்டும் சதி

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(மன்னார்)

மன்னார் தினச்சந்தை வியாபார நிலையம் அதிகாலை எரியூட்டப்பட்ட சம்பவம் மன்னார் நகர சபைக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் வன்முறையினைத் தூண்டி விடும் ஒரு செயலாகவே காணப்படுவதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவ் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தமிழ், முஸ்ஸிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் இருந்து புலிகளினால் வெளியேற்றப்பட்ட முஸ்ஸிம் மக்கள் மீண்டும் மன்னாரில் வந்து தமது குடியேற்றத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவொரு வேலைத்திட்டமாக இருந்தாலும் இம்மக்கள் இன, மத வேற்றுமையின்றி சேவையாற்றி வருகின்றனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மன்னார் நகர சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. இந்த நிலையில் குறித்த சபை மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட் டங்களை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த காலங்களில் வாராந்த சந்தையாக குறித்த சந்தை காணப்பட்டது. நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலையின் காரணமாக தினச் சந்தையாக காணப்பட்டது. இதன்போது தமிழ், முஸ்ஸிம் வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

அதிகளவான வர்த்தகர்கள் தென் பகுதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இந்த நிலையில் குறித்த சந்தையை மீண்டும் வாராந்த சந்தையாக மாற்ற மன்னார் நகர சபை நடவடிக்கைகளை மேற் கொண்டது. குறித்த வியாபாரிகளை சந்தையினை விட்டு எழும்ப நகர சபை கால அவகாசத்தினை வழங்கி வந்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபைக்கும் குறித்த வர்த்தகர்களுக்கும் இடையில் வன்முறையினைத் தூண்டி மன்னார் மாவட்டத்தில் தமிழ் முஸ்ஸிம் மக்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமையினை உடைத்து இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சித்துள்ளன. மனனார் நகர சபையின் வேலைத்திட்டத்தினை முடக்கவும் சில தீய சக்திகள் முயற்சிக்கின்றது.

எனவே குறித்த சதியை நடத்தியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# நெல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பெரும்போகத்தின் போது நெல் கொள்வனவு செய்வதற்காக 28500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2011 சிறுபோகம் மற்றும் 2011-2012 பெரும்போகம் என்பவற்றின் போது 4.5 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுவதோடு மேலதிகமாகவுள்ள 1.01 மில்லியன் மெற்றிக்தொன் நெல்லை ஏற்றுமதி செய்ய உள்ளதாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இலங்கையின் வருடாந்த அரிசி பயன்பாடு 2.94 மெற்றிக்தொன் என எதிர்பார்க்கப்படுகிறது. நெல் கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கி 15000 மில்லியனும் மக்கள் வங்கி 5000 மில்லியனும் பிரதேச அபிவிருத்தி வங்கி 1500 மில்லியனும் தனியார் துறை கடனாக வழங்கவுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2000 மில்லியன் வழங்கப்படவுள்ளதோடு நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு 1280 மில்லியன் ரூபா வழங்கப்படும்.

மேலதிகமாக உள்ள அரிசியில் 500 மெற்றிக்தொன்னை கொள்வனவு செய்ய உலக உணவுத்திட்டம் இணங்கியுள்ளது.

## முதிரை மரங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா பூவரசன்குளம் சிவநகர் பகுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான வெட்டப்பட்ட முதிரை மரங்கள் பொலிஸாரினால் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பூவரசன்குளம் சிவநகர் பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன்போது அரிவதற்கு ஏற்ற வகையில் வெட்டப்பட்ட முதிரை மரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மரத்தினை அரிவதற்காக பயன்படுத்தும் இயந்திரங்கள் இரண்டையும் மரங்களையும் கைப்பற்றிய பொலிஸார்,. அவற்றினை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர் தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யானைத் தந்தங்களை விற்க முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

எட்டு இலட்சம் ரூபாவுக்கு எட்டு யானைத் தந்தங்களை விற்க முற்பட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைதுசெய்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். இவர்களில் ஒருவரிடம் ஐந்து யானைத் தந்தங்கள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## காலாவதியான கேக்; கட்டினார் 5 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாங்சால் வீதியில் காலாவதியான கேக்குகளை விற்பனை செய்த வர்த்தகருக்கு யாழ். நீதிமன்றத்தால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

# யுத்தக் குற்றவாளிகளை மேற்குலகம் பாதுகாக்கிறது

## மின்வலு அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமெரிக்காவும் ஐரோப்பாவும் யுத்தக் குற்றவாளிகளைப் பாதுகாத்து வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட புலிகளைப் பாதுகாக்கும் நோக்கில் அமெரிக்காவும், ஐரோப்பாவும் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆகியன யுத்தக் குற்றவாளிகளுக்கு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.

தி.உருத்திரகுமாரன் மற்றும் நெடியவன் போன்றோருக்கு அமெரிக்காவும், நோர்வேயும் ஏன் புகலிடம் வழங்கியுள்ளன.

அண்மையில் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் வடக்கிலிருந்து சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

சர்வதேச சமூகமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் யுத்த காலத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை குறித்து மட்டுமே கவனம் செலுத்துகின்றது.

யுத்தத்தின் போது இடம்பெற்ற ஏனைய விடயங்கள் தொடர்பில் இவர்கள் கவனம் செலுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.பல்கலையை முன்னிலைப்படுத்த சகலரது ஒத்துழைப்பும் தேவையாகும்

## உப வேந்தர் வசந்தி அரசரட்ணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமான உயர்கல்வி நிலையமாகக் கருதப்படுகிறது. போர்ச் சூழ் நிலைகளினால் கற்பித்தல் உட்பட மற்றும் விடயங்களில் பின்தங்கியுள்ளவர்கள் இருந்தாலும் சகலரது ஒத்துழைப்புடன் முன்மாதிரியான பல்கலைக்கழகமாக மாற்றியமைக்க வேண்டுமென்று பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக பன்னாட்டு ஆய்வு மாநாட்டிற்கான செய்தியாளர் மாநாட்டில் (2012) தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழக கணிதத் துறை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உபவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் 10 ஆம் இடத்தில் இருந்த எமது பல்கலைக்கழகம் இப்போது 8ஆம் இடத்திற்கு முன்னேறிச் சென்றுள்ளது. உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களின் ஆய்வு மாநாடுகள் நடைபெறுவது போல ஆய்வு மாநாடுகள் யாழ்.பல்கலைக்கழகத்திலும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகொண்டு நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இம்மாநாடுகள் மக்கள் மத்தியில் சென்றடைவதற்கு ஆரோக்கியமான செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டு உதவ வேண்டும்.

ஊடகங்களைப் பொறுத்த மட்டில் உண்மையான செய்திகளை உறுதிசெய்து பிரசுரிக்க வேண்டும். இலங்கையில் ஆறு பல்கலைக்கழகங்கள் தேசிய பல்கலைக்கழகங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள என்ற செய்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பெயரைப் பிரசுரித்திருந்தார்கள். உண்மையில் எமது பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்படவில்லை என்று கூறினார்.

இம்மாநாட்டில் கணிதத் துறைத தலைவர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராசா, பேராசிரியர் விக்னேஸ்வரன், பேராசிரியர் சிவநாதன், பேராசிரியர் புஸ்பரட்ணம் மற்றும் பத்திரிகையாளர்களும் தத்தமது கருத்துகளை வெளியிட்டனர்.

# பழுதடையும் கோபுர மணிக்கூடு இதுவரை திருத்தம் செய்யப்படவில்லை

(குருநகர்)

யாழ்.குடாநாட்டில் அமைந்துள்ள கோபுரமணிக்கூடுகள் அனைத்தும் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இவ்விடயம் சம்பந்தமாக பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதும் இதுவரை மேற்படி நேரம் காட்டிகள் சம்பந்தப்பட்டவர்களால் சீர்செய்யப்படாமலே இருந்து வருகின்றன.

மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கோபுர மணிகள் என்றில்லாமல் மருதனார்மடம் சந்தியில் இராமநாதன் நுண்கலைபீடவளாக எல்லையில் அமைந்துள்ள கோபுர மணிகள் அத்துடன் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சலவைப் பவுடர் நிறுவனமொன்று நிறுவியுள்ள சிகர மணிகளும் இவ்விதம் பழுதடைந்தே காணப்படுகின்றன.

கோபுர மணிக்கூடுகள் பழுதடைவதனால் அதனைப் பெரிதும் பயன்படுத்தும் மக்கள் ஏமாற்றப்பட்டு வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. அதேவேளை, யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அடிக்கடி கோபுர மணிக்கூடுகள் பழுதடைவதனால் ராசி இல்லையோ என்றும் பலர் பேசிக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது. (68)

# எழுத்தாக்க போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியின் சகல எழுத்தாக்கப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி கோட்ட எழுத்தாக்கப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், மருதங்கேணி கல்விக்கோட்ட எழுத்தாக்கப் போட்டிகள் (மீள்குடியமர்ந்த பாடசாலைகளுக்கான) செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையிலும், குடத்தனை அ.த.க.பாடசாலையிலும் நடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

# அம்புலன்ஸ் வண்டியொன்றை பெற்றுத்தருமாறு கோரிக்கை

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியொன்று அவசியம் தேவையாகவுள்ளதாக நோயாளர்கள், பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு தற்போது மீள் நியமனம் பெற்று புதிய வைத்திய அதிகாரி ஒருவர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளதால் காலை மாலை என வைத்திய சேவைகள் முழுமையாக இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்துடன் இவ்வைத்தியசாலையில் உள்ள மகப்பேற்று மருத்துவ மனைக்கும் அதிகளவான கர்ப்பிணிகள் வருகை தருவதுடன், சிகிச்சை பெற்றுச் செல்வதுடன் குழந்தைப் பிரசவமும் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, அவரச சிகிச்சைக்காக இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் மேலதிக சிகிச்சையைப் பெற வேண்டுமாயின் வேறு அம்புலன்ஸ் வண்டி வரவழைக்கப்பட்டே போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கடந்த மாதம் நடைபெற்ற வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதைவிட இவ் வைத்தியசாலையில் தாதியர்களுக்கான விடுதியொன்றும் அமைக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)

# சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(சாவகச்சேரி)

பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவியை ஆட்டோவில் கடத்திய சந்தேகத்தில் கைது செய்த 5 நபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த 5 சந்தேக நபர்களை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்த வேளை இவர்களுக் கெதிரான விசாரணை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி சந்தேக நபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (11)

# வடமராட்சியில் 80 ஆசிரியர்கள் வன்னிப் பகுதிக்கு இடமாற்றம்

(வடமராட்சி)


வடமராட்சிக் கல்வி வலயத்திலிருந்து 80 ஆசிரியர்கள் வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள் ளனர்.


இவர்களது இடமாற்றம் மார்ச் 15ஆம் திகதிக்குள் இடம் பெறவுள்ளது. இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் 2 வருடங்கள் வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் சேவையாற்றப் பணிக்கப்படுகின்றனர்.

அதேபோன்று தீவகக் கல்வி வலயத்தைத் தவிர யாழ்.மாவட்டத்தில் உள்ள மற்றைய கல்வி வலயங்களிலிருந்தும் ஆசிரியர்கள் வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படும் ஆசிரிய இடமாற்றத்துக்கு வன்னியிலிருந்து ஆசிரியர்கள் யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். (100)

# குருதிப் பற்றாக்குறையை தீர்க்க இராணுவத்தினரின் இரத்ததானம்





(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் குருதிப் பற்றாக் குறையை போக்கும்முகமாக 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்த தானம் செய்து கொண்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையினால் விடுக்கப்பட்ட அவசர கோரிக்கையை அடுத்து இலங்கை இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவினரும் பொலிஸாரும் இணைந்தே இவ்வாறு இரத்தானம் செய்து கொண்டனர்.

நேற்று முற்பகல் நடைபெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா 512 ஆவது படைப்பிரிவின் தளபதி பல்லேவல யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்சிகேரா மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அதிகாரிகள, தாதிய உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் கலந்துகொண்டனர். (பா)

# அரச அதிபர் தலைமையில் கச்சதீவுக்கு யாத்திரிகர்கள்

எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய பெருநாளை முன்னிட்டு ஒரு தொகுதி பணியாளர்களை கச்சதீவுக்குத் அழைத்துச் செல்ல யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஏற்பாடு செய்துள்ளார். செயலக நலன்புரிக் கழகத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஏற்பாடுகளுக்கமைய நாளை பின் இரவு 12.30 மணிக்கு போக்குவரத்துச் சபை பஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு குறிகாட்டுவானிலிருந்து வடதாரகைக் கப்பல் மூலமாக கச்சதீவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது. (120)

# நீதிமன்றத்தை அவமதித்தவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

மடம் வீதிப் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவரை அதே இடத்தில் இருக்கும் நபர்கள் தாக்கிய குற்றத்திற்காக விசாரணைக்கு அழைக்கப்பட்ட 4 சந்தேக நபர்களில் ஒருவர் மன்றை அவமதித்த குற்றத்திற்காக கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

யாழ்.நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது நீதவான் நீதிமன்றின் கட்டளைப்படி செயற்படுமாறு கூறியவேளை, மன்றின் கட்டளையை அவமதித்ததுடன், கட்டளையை மீறிய குற்றத்துக்காகவும் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான அடாவடித்தனத்தில் ஈடுபட்டால் விளக்கமறியலில் வைக்கப்படுவர் என்றும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா எச்சரித்துள்ளார். (எஸ்)

# கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வித்தியாலயத்தின் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (04)


# நெடுந்தீவு முகிலனின் குறும்பட வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் "வெள்ளைப்பூக்கள்" குறும்பட வெளியீட்டு விழா எதிர்வரும் 08ஆம் திகதி காலை 10.35 மணிக்கு யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்,கிளிநொச்சி உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட இணைப்பாளர் திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வாழ்த்துரையை சிகரம் ஊடக இல்லப்பணிப்பாளர் கோ.றுஷாங்கன் நிகழ்த்த வெளியீட்டுரையை நேத்ரா தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எஸ்.கோணேஸ்வரன் நிகழ்த்துகின்றார். ஆய்வுரையை யப்பான் டோக்கியோ கச்சுயின் பல்கலைக்கழக முன்னை நாள் ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலையின் ஆரம்பச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ள ஆடைத்தொழிற்சாலையின் ஆரம்பச்செயற்பாடுகளை ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் நேற்று முன்தினம் பார்வையிட்டு அது தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்ந்தார்.

எம்.ஏ.எஸ்.விடியல் எனும் தொழில் நிறுவனத்தினரால் கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள ஆடைத்தொழிற்சாலையின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பாகவும் மாவட்டத்தில் அதன் செயற்பாட்டை நிரந்தரமாக மேற்கொள்ளுதல், அதனூடாக வேலைவாய்ப்புக்களை பெறுபவர்களின் தொகையை அதிகரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் தொழில் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தற்போது 35 வரையான வேலையற்ற யுவதிகளை உள்வாங்கி மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தொழிற்சாலை மாவட்டத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில் ஆரம்பிப்பதனூடாக தொழிற் சாலை விஸ்தீரணயமடையுமெனவும் அப்போது சுமார் ஆயிரத்திற்கும் அதிகமானவர் களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியுமெனவும் குறித்த தொழில் நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர் பிரசாந் தேவமனோகரன் தெரிவித்தார். இதன்போது கரைச்சி பிதேசசெயலரும் கலந்துகொண்டார்.

# யாழின் விவசாய செயற்பாடுகளை வடமாகாண ஆளுநர் பார்வையிட்டார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்படும் விவசாயநடவடிக்கைகளை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பார்வையிட்டு அது தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு கடந்த புதன் கிழமை விஜயம் செய்த ஆளுநர் கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தூவல் நீர்ப்பாசன தொகுதி உபகரணங்களைப் பயன்படுத்தி விவசாயிகளினால் முன்னெடுக்கப்படும் விவசாய நடவடிக்கைகளையும் ஆளுநர் பார்வையிட்டார்.

கோண்டாவில் வடக்கு பிரதேசத்திலுள்ள பப்பாளித்தோட்டம், கோப்பாய் தெற்கு பிரதேசத்திலுள்ள மரக்கறித்தோட்டம், இடைக்காட்டிலுள்ள வெங்காயச்செய்கை, மற்றும் வல்லைப் பிரதேசத்திலுள்ள வெங்காயச் செய்கை ஆகியவற்றையும் பார்வையிட்டார். இதனபோது விவசாயிகள் பப்பாசிச் செய்கை மூலம் வருடமொன்றுக்கு 2 இலட்சம் ரூபா வருமானம் கிடைப்பதாகவும் தெரிவிதனர். அத்துடன் யாழ்.குடாநாட்டில் மரக்கறி சேகரிப்பு நிலையங்கள், விற்பனை நிலையங்கள் அமைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வெங்காயச்செய்கையின் வீழ்ச்சி குறித்து விவசாயிகளின் கருத்துக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக ஏற்றுமதி வசதிகளை உருவாக்கித் தருவதாகவும் களஞ்சிய வசதிகளை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இவ்விஜயத்தில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்டீன், வடமாகாண விவசாயத் திணைக்களப்பணிப்பாளர் தி.சிவகுமார் வடமாகாண விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சர்வானந்தா யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் இ. சிறிபாலசுந்தரம் உள்ளிட்ட விவசாயத்துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தொண்டர் ஆசிரியர்களை பதிவு செய்ய அறிவுறுத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியராகக் கடமை யாற்றும் சகல ஆசிரியர்களையும் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றும் தொணடர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக ஆராயும் முகமாகவே இந்தப்பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர்கள் தமது விபரங்களை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் இணைப்புச் செயலகத்தில் பதிவு செய்யுமாறு செயலக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (77)

# முரசின் இன்றைய பலன்


(03.03.2012 –சனிக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 20 ஆம் திகதி. நவமி முன்னிரவு 7.35 வரை.
நட்சத்திரம் திருவாதிரை. சித்தம்முன்னிரவு 8.44.
இராகுகாலம் 09.26 - 10.56 வரை. சுபநேரம் 3.26-4.56 வரை.
எமகண்டம் 1.56-3.26 வரை. குளிகைகாலம் 6.26-7.56 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தாராளம், நிதானம் வேண்டும், உறவினர் அனுசரணை, சஞ்சல மிகுதி. |
| ரிஷபம் | விருத்தி, உறவினர் வருகை, சுபகாரியம், தொழில் பதவி உயர்வு. |
| மிதுனம் | மகிழ்ச்சி, வீண்செலவுகள், தடைதாமதம் அகலும், புத்திரரால் உதவி. |
| கடகம் | சிறுநன்மை, காரியசித்தி, திருமணம் கைகூடும், பிரயாணங்கள். |
| சிம்மம் | சஞ்சலம், உடல் ஆரோக்கியம், நீண்டகால தடைநீங்கும், ஆலயவழிபாடு. |
| கன்னி | தேர்ச்சி, அதிகாரிகள் ஒத்துழைப்பு, அலைச்சல், வியாபாரத்தில் முன்னேற்றம். |
| துலாம் | வாக்குநலம்,மருத்துவச்செலவுகள், கருத்து முரண்பாடு,கொடுக்கல் வாங்கல்கள் கவனம் |
| விருச்சிகம் | கவனம் அவசியம், முதலீடுகள் பெருகும், புத்திரபாக்கியம், வெளிநாட்டுப்பயணம். |
| தனுசு | பெண்களால் இலாபம், திருமணத்தடை, பொருள் வளம், மனதில் அச்சம். |
| மகரம் | பணவரவு, எதிர்பாரா இடமாற்றம், வேலைவாய்ப்பு, பணியில் நெருக்கடி. |
| கும்பம் | கடன் நீங்குதல், பயண அலைச்சல், தலையீடுகளைத் தவிர்க்கவும், பாராட்டுக்கள். |
| மீனம் | பிரயாணவெற்றி, உறவினர்களால்தொல்லை, பொருள்வரவில் தேக்கம்,கடன் தொல்லை. |

# பரமர் சங்கமம்



அப்பவும் சரி இப்பவும் சரி எப்பவும் சரி பரமரிடம் ஒட்டு மொத்தமாய் ஐந்து, பத்தாயிரம் ரூபாவோ அரைப் பவுணுமோ இருந்ததில்லை எண்டாப்போல ஆகக் குறைச்சு மதிச்சுப்போடாதேங்கோ. எழுபதாம் ஆண்டில கல்யாணம் நடக்கேக்க ஒன்பதரைப் பவுணில வைரக் கொடி கட்டினனான்.

அதன் பின்னால மங்குசனி பிடிச்சதுதான். இன்னமும் பொங்கு சனியாகேல்ல. தொண்ணூறுக்குப் பிறகு புலிகள் ஒவ்வொரு குடும்பங்களிட்டேம் ரெண்டு பவுண் இல்லாட்டி பத்தாயிரம் ரூபா பணம் வசூலித்தவை.

ஒரு ஏழைப் பரதேசியும் தப்பேல்ல. அவங்கட நிர்வாக கட்டமைப்பு அந்தமாதிரி. என்னேம் புடிச்சுக் கொண்டாங்க. அதுக்கு அவை சொன்னே நீங்கள் பத்தாயிரம் ரூபா தந்தா ஒரு பிளேன் விழுத்துவம் எண்டுதான்.

அப்ப ஒரு பவுண் ஐந்தாயிரம் வித்தே; இல்லாத என்னிடம் என்னத்தை வசூலிக்கிறது. விசாரணைக்கு கூப்பிட்டாங்கள் என்னைப் போல பணமோ பவுணோ குடுக்க வழியில்லாதவை போராட போயிருக்க சொல்லிப் போட்டினம்.

பிறகென்ன ரெண்டுநாள் தடுப்பில வைக்கப்பட்டிருந்தன். இதுகளெல்லாம் எனக்கு புதுமையான அனுபவமாக இருந்தது. குற்றம் எதுவும் செய்யாமலே மறியல் அனுபவித்தது.

அண்டண்டாடு உழைத்து சீவியம் நடத்துற எங்கட பாடு எப்படியிருக்கும்? பாக்க வந்த மனிசியிடம் எங்களுக்கு நன்றாக தெரிஞ்ச அமைப்பாளரிடம் கடிதம் வாங்கிவர அனுப்பினேன்.

ஒரு நாள் அதனாலும் வீணானது. எனக்குப்பதிலாக மனிசியை மறியல் இருத்திப்போட்டு நான் போய் அந்த அமைப்பாளரிடம் கடிதம் வாங்கிவந்து கொடுத்தேன்.

"அப்படி என்னண்ணை அரைப்பவுண் கூட கிடையாதா........?" என்றும் என்னிடம் கேட்டிருந்தார். கடிதத்தை வாங்கிக் கொடுத்த கையோட மனிசிய விடும்படி வாதாடினேன். அதுக்குப்பொறுப்பாயிருந்தவருக்கு மேலிடத்து உத்தரவு கிடைக்க வேண்டாமா?

வீட்டில பிள்ளையள், மனிசியோ மறியலில், உழைப்பு இல்லாமல் இன்றோடு அஞ்சாறு நாட்கள் தெருத்தெருவாக அலைஞ்ச மன உளைவு. ஆனாலும் இடையிடையே கடையைத்திறந்து அஞ்சைப் பத்தை உழைச்சதால் சோத்துப்பாசல் வாங்கி வந்து புள்ளையளும் நானும் சாப்பிட்டுப்போட்டு படுப்பம்.

மனிசி வீட்டில் இல்லாத வெறுமை கடிதம் கொடுத்து ரெண்டு நாளாகுது. கோப்றேசனுக்குப் போய் ரெண்டு கள்ளடித்து விட்டு போனேன் விடேல்ல.

"என்னுடைய ஞானம் யோசிச்சிது. தம்பி நீர் இயக்கமெண்டாலும் தனி மனிதன் நான் தனி மனிதன் எண்டாலும் இயக்கம்" இப்படிச் சொன்னன். இதைக்கேட்ட பொறுப்பாளர் திரும்பவும் அதைச் சொல்லச் சொல்லிக் கேட்டார்.

சொல்லிப் போட்டு உங்கட மத்திய குழு உறுப்பினர்களிடம் இந்தப் பரமர் தான் சொன்னேணெ்டு சொல்லுமெண்டும் கூறினன். அதோடு பெண்களைத் தடுத்துவைத்திருந்த இடத்துக்குப் போய் மனிசியை வெளிக்கிடச் சொல்லி நிண்டன்,

அங்கை இவவைப்போல தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண்களையெல்லாம் மிரண்டு என்னைப் போகும்படி தடுத்து அனுப்பி விட்டினம். இதுகளெல்லாம் எங்கட வாழ்க்கேல கண்ட அனுபவத் துளிகள். பின்னை இல்லையெண்டு சொல்லுவீங்களே....



# இந்துக்களின் போர்

## யாழ். இந்து வலுவான ஆரம்பம்



ஆரம்ப நிகழ்வின்போது...



படங்கள் : தயாளபாலன்

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் போரில் யாழ். இந்துக் கல்லூரி அணி வலுவான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெறும் ஐந்தாவது இந்துக்களின் போர் நேற்றைய தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலிரண்டு விக்கெட்டுக்களை குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் இழந்து தடுமாறியது. இருப்பினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித் தலைவர் பங்குஜன் மற்றும் ராகுலன் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இவர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அதன் முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மிகச் சிறப்பான முறையில் ஆடிய பங்குஜன் இரண்டு சிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் அடங்கலாக 98 ஓட்டங்களைப் பெற்று, இரண்டு ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார். மற்றும் ராகுலன் 38 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றார். மூன்றாவது விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும் 129 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் ஜனுதாஸ் 42 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வாமமன் 49 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், குஸ்மன் 65 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், நிலாயனன் 18 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி மதுஷனின் சிறப்பான துடுப்பாட்டத்தில் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, யாழ். இந்துக்கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் மதுஷன் 40 பந்துகளில் 64 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றார். மற்றும் ஆட்டமிழக்காது யஸ்மின் 45 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் ராகுலன் 26 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இன்று போட்டியின் இறுதி நாளாகும். (93)

## 200 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்துவோம்


(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி அணியை 200 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி, எமது அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்ல முயற்சிப்போம் என கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் பி. பங்குஜன் தெரிவித்தார்.

இந்துக்களின் போரின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றிருந்தாலும் முதலில் துடுப்பாட்டத்தையே தெரிவு செய்திருப்போம். நாம் எதிர்பார்த்தது போன்று முதலில் துடுப்பாடியமை மகிழ்ச்சி. அதிலும் மூன்றாவது விக்கெட்டுக்காக நானும், ராகுலனும் இணைந்து சிறப்பானதொரு ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றதில் மகிழ்ச்சி. இருப்பினும் இன்னும் நாம் 300 ஓட்டங்களுக்கு மேல் பெறத்திட்டமிட்டோம்.

இருப்பினும் எமது பந்து வீச்சாளர்களின் அபாரமான செயற்பாட்டின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு கடும் நெருக்கடி கொடுப்போம்



என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இன்றைய தினம் இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு முழு உத்திகளையும் பயன்படுத்தி எதிரணிக்கு கடும் நெருக்கடி கொடுத்து வெற்றிக்காகப் போராடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (93)


## வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவோம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் எமது அணி வலுவானதொரு ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கக் கூடிய வகையில் எமது ஆட்டம் அமையும் என யாழ். இந்துக் கல்லூரி அணியின் தலைவர் ஜி. கிருசோபன் தெரிவித்துள்ளார்.

இந்துக்களின் போரின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்களான பங்குஜன் மற்றும் ராகுலன் ஆகியோரின் இணைப்பாட்டம் எமது அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தன. இருப்பினும் இவர்களின் இணைப்பாட்டத்தைப் போன்று நாமும் சிறந்ததொரு இணைப்பாட்டத்தை வழங்கி கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு நெருக்கயை ஏற்படுத்துவோம். எமது அணியின் நம்பிக்கை நட்சத்திரமான மதுசன் சிறப்பான நிலையில் ஆடி வருகின்றார். இன்றைய தினமும்



அவர் சிறப்பான முறையில் ஆடி அணியைப் பலமானதொரு நிலைக்கு இட்டுச் செல்வார் என நம்புகின்றேன். ஒட்டுமொத்தத்தில் எமது செயற்பாடு திருப்திகரமாக இருந்தது எனவும் அவர் தெரிவித்தார். (93)

## பரபரப்பான போட்டியில் இலங்கை அணி வெற்றி கலைந்தது இந்தியாவின் இறுதிப் போட்டி கனவு



சி.பீ. கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் அவுஸ்ரேலிய அணியை இலங்கை அணி 9 ஓட்டங்களால் வென்றது. இதன் மூலம் இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது. மெல்பேர்னில் மிக பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 238 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 49.1 ஓவர்களில் 229 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

239 ஓட்ட இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 3 ஆவது ஓவரில் மலிங்கவின் பந்துவீச்சில் டேவிட் வோர்னரையும் (6) 4 ஆவது ஓவரில் மத்தியூ வட்டையும் (9) இழந்தது. 6 ஆவது ஓவரில் பீற்றர் பொரெஸ்ட் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோது அவுஸ்ரேலியா கடும் நெருக்கடிக்குள்ளானது. பின்னர் ஷேன் வட்ஸன், மைக் ஹஸி ஆகியோரின் துடுப்பாட்டத்தினால் அவ்வணி 25 ஆவது ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அவ்வேளையில் இரு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு காணப்பட்டபோதிலும் 41 ஆவது ஓவரில் 178 ஓட்டங்கள் பெற்றிருந்தவேளையில் 7 ஆவது விக்கெட்டையும் இழந்தது. அவ்வணி மேலும் 9 ஓட்டங்களைப் பெற்றபோது கிளின்ட் மெக்கி(6) ரன் அவுட்டானார்.

கடைசி 3 ஓவர்களில் அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட்டுகள் கைவசமிருந்த நிலையில் 23 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரங்கன ஹேரத் வீசிய 47 ஆவது ஓவரின் முதல் பந்தில் டேவிட் ஹஸி சிக்ஸர் ஒன்றை அடித்தபோது போட்டியின் போக்கு மீண்டும் அவுஸ்ரேலியாவுக்கு சாதமாகும் சாத்தியம் தோன்றியது. கடைசி 12 பந்துகளில் அவ்வணிக்கு 14 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன. லஷித் மலிங்க வீசிய 48 ஆவது ஓவரில் 2 ஆவது பந்தில் டில்ஷானிடம் பிடி கொடுத்து ஷேவியர் டொஹெர்த்தி ஆட்டமிழந்தார். இறுதி ஓவரில் அவுஸ்ரேலியாவுக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் நுவன் குலசேகர பந்துவீச வந்தார். அந்த ஓவரின் முதல் பந்துவீச்சிலேயே டேவிட் ஹஸி ஆட்டமிழந்ததால் இலங்கை அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வணியின் சார்பில் டேவிட் ஹஸி 74 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஷேன் வட்ஸன் 65 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை பந்துவீச்சாளர்களில் லஷித் மலிங்க 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நுவன் குலசேகர 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இலங்கையின் சார்பில் 75 ஓட்டங்களைப் பெற்ற தினேஷ் சந்திமால் இப்போட்டியின் சிறப்பாட்டக்காராகத் தெரிவானார்.

இத்தொடரின் முதல் சுற்றில் ஒவ்வொரு அணியும் தலா 8 போட்டிகளில் விளையாடிய நிலையில் அவுஸ்ரேலியா, இலங்கை ஆகிய அணிகள் தலா 19 புள்ளிகளைப் பெற்று இறுதிப்போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளன. மூன்று போட்டிகளைக் கொண்ட இறுதிப் போட்டியின் முதல் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

# கால்டன் மரதன் ஓட்டம்; வெற்றியாளருக்கு இலட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட கால்டன் மரதன ஓட்டப் போட்டிக்கான போட்டியாளர் தெரிவுப் பயிற்சி எதிர் வரும் 10 ஆம் திகதி துரையாப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் தமது விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மெய்வல்லுநர் பயிற்சியாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டியில் முதல் 10 இடங்களை வெல்லும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

முதலாம்இடம் - ஒரு இலட்சம ரூபா, இரண்டாமிடம் 50 ஆயிரம் ரூபா, மூன்றாமிடம் - 25 ஆயிரம் ரூபா, நான்காம் இடம் 20 ஆயிரம் ரூபா, ஐந்தாம் இடம் 15 ஆயிரம் ரூபா, ஆறாம் இடம் 12ஆயிரத்து 500ரூபா, ஏழாமிடம் - 10 ஆயிரம், எட்டாம் இடம் - 7 ஆயிரத்து 500, ஒன்பதாம் இடம் - 5 ஆயிரம், பத்தாமிடம் - 2ஆயிரத்து 500 முறையே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, விண்ணப்பங்களை உரிய திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுக கொள்ளப்பட்டுள்ளனர் . (எஸ்)

# ஊர்காவற்றுறை கோட்ட வலைப்பந்தாட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக் கோட்ட வலைப்பந்தாட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**15 வயதுப் பிரிவு** - முதலாமிடம் - கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம் - அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு** - முதலாமிடம் - கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம் - அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - நாரந்தனை றோ.க. வித்தியாலயம்.


**19 வயதுப் பிரிவு** - கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம் - கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயம். (93)

# உதைபந்தாட்ட முதல் சுற்று 4 கழகங்கள் வெற்றி

(இணுவில்)

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இதுவரை 4 கழகங்கள் முதல் சுற்றில் வெற்றிபெற்றுள்ளன.

குப்பிளான் ஞான கலா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும், சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் அணியை எதிர்த்து தெல்லிப்பளை யூனியன விளையாட்டுக் கழகமும், உருமபிராய் சரஸ்வதி பி பிரிவை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் அணியும் உரும்பிராய் ஜோகபுரம் நிலாஸ்ரார் விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் கே.எஸ்.எஸ். விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன. (120)



அச்சுவேலி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் க.மோகனராயன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் வெற்றி பெற்ற மாணவனுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதைக் காணலாம்.

# வலிகாமம் பிரதேச மஞ்சி கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் பிரதேச மஞ்சி கரப்பந்தாட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானத்தில் இறுதிப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றன.

பெண்கள் பிரிவில் - சஙகானையுத் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதின. 3:25,12:25,15:25 என்ற கணக்கில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை இராணுவ விளையாட்டுக்கழகமும் மோதியது. 16:25,17:25 என்ற கணக்கில் இராணுவ விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. (93)

# உடுவில் பிரதேச கபடிப் போட்டிகள்

(ஏழாலை)

உடுவில் பிரதேச கபடிப் போட்டிகள் ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில் - இணுவில் இந்து விளையாட்டுக்கழக இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி 49:32 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

பெண்கள் பிரிவில் -சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகம் சுன்னாகம் ஜனசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி 43 :07 என்ற கணக்கில் வெற்றியீட்டியது. (93)

# வடமராட்சி கல்வி வலய கரம்போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய கரம்போட்டி முடிவுகள் வெளியிடபட்டுள்ளன. இந்தப் போட்டி வட மத்திய மகளிர் கல்லூரி உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

**15 வயதுப் பிரிவு**
**ஆண்கள**

முதலாமிடம்- பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, இரண்டாமிடம் - தேவரையாளி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - புற்றாளை மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**
**ஆண்கள**

முதலாமிடம் - புற்றளை மகா வித்தியாலயம், இரண்டா மிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலம், மூன்றாமிடம் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.

**15 வயதுப் பிரிவு**
**பெண்கள**

முதலாமிடம் வடமத்திய மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,மூன்றாமிடம் - வட இந்து மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவுப்**
**பெண்கள**

முதலாமிடம் - வட மத்திய மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் வட இந்து மகளிர் கல்லூரி.

(93)



கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப்போட்டியில் சி.பிரிவில் முதல் தடவையாக கிண்ணம் பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணி வீரர்கள் கிண்ணத்துடன் நிற்பதைக் காணலாம்.



கண்டி பேராதனைப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்ரங்கில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் பங்குபற்றி பதக்கங்களும், சான்றி தழ்களும் பெற்றோரைப் படத்தில்காணலாம். இடமிருந்து வலம் - தே.பிரபாகரன் ( காட்டா- வெண்கலம் 3 ஆம்இடம் , சண்டை இரண்டிலும் - வெள்ளி 2 ஆம் இடம்), செ.சசிகுமார் (சண்டைப் போட்டி 3ஆம் இடம் வெண்கலம்), மா. இரத்தின சோதி - 55 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டியில் 3ஆம்இடம் வெண்கலம்), இ.ஆழிக்குமரன் (சண்டைப்போட்டி 1ஆம் இடம் தங்கம்), கோ.பிரசாந்தினி (காட்டா - சண்டை இரண்டிலும் இரண்டு தங்கப்பதக்கம்).

# கிளிநொச்சி மாவட்டத்தில் மாட்டுவண்டிச் சவாரிச் சங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல வருடங்களாகச் செயற்பட்டு வந்த கிளி. மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச் சங்கம் புனரமைக்கப்படவுள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ் நிலைகளால் செயலிழந்து ஆவணங்கள் யாவற்றையும் இழந்த நிலையில் சவாரியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வந்தவர்கள் தற்போது அங்கத்தவர்களாக ஒன்றிணைந்து சங்கத்தினை புனரமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக கிளி. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மீள்புனரமைக்கும சங்கக் கூட்டம் நடைபெறவுள்ளது.இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் சவாரிப் போடடிகளை நடத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (142)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்; வங்கிக் கட்டமைப்பையும் தாக்கும்

(கொழும்பு)


ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில், மேற்குலக நாடுகள் இலங்கைக்கெதிரான தீர்மானத்தைக் கொண்டுவர முயற்சி செய்வதனால், இலங்கையின் பிரதான வணிக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகள் கட்டமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என குறித்த வங்கிகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தீர்மானத்தின் மூலம் இலங்கையில் ஏற்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளுக்கு அழுத்தங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும். அந்த வகையில், இலங்கையின் பிரச்சினைக்கு உள்நாட்டுத் தீர்வு பொருத்தமானது என சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் என இலங்கையின் பல வங்கிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

யுத்தம் முடிவடைந்து, இலங்கை முன்னேற்றத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வாறான யோசனை கொண்டுவரப்படுவது பொருத்தமற்றது.

எனவே சர்வதேச சமூகம் இது தொடர்பில் நன்கு ஆராய்ந்து, இலங்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயுவின் விலையை 350 ரூபா அதிகரிக்க கோரிக்கை



(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை 350 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் என லாப் சமையல் எரிவாயு நிறுவனம் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கையை அந்த நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகபிட்டிய முன்வைத்துள்ளார்.

உலகச் சந்தையில் சமையல் எரிவாயுக்களின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக, தமது நிறுவனம் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, சமையல் எரிவாயுவின் விலை சீர்திருத்தம் தொடர்பாக தமது நிறுவனம் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளிடம் கலந்துரையாடியதாகவும் லாப் சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

## அரிசி ஏற்றுமதிக்கு நடவடிக்கை அதிக விளைச்சல் நெல்லினங்கள் அறிமுகம்

(கொழும்பு)

நாட்டின் அரிசி ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 215 மெற்றிக் தொன் அரிசி அடுத்த வருடம் ஏற்றுமதி செய்யப்படுமென அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இதற்குத் தேவையான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காகத் தரிசு நிலங்களில் அதிக விளைச்சலைப் பெறக் கூடிய விதை நெல்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. உர மானியமும் இத்திட்டத்திற்கு மிகவும் உந்து சக்தியாக அமையும்.

இந்நடவடிக்கைகளுக்காக நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில் பூர்த்தியாக்கப்படவுள்ளன. அத்துடன் குளம் மற்றும் வாவிகளின் புனரமைப்பிற்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு பாசுமதி, சம்பா, மூலிகை அரிசி போன்ற வகை அரிசிகளை அதிகளவு ஏற்றுமதி செய்வதே அரசாங்கத்தின் நோககாகும் என்றார்.

# பல்கலைக்கழக இளையோர் மாநாடு சிங்கப்பூரில் நடத்துவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

உலகப் பல்கலைக்கழக இளைஞர் மாநாடு 2012 இவ்வருடம் ஜூலை 6 முதல் 8 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.




21 ஆம் நூற்றாண்டில் உலகெங்குமுள்ள தமிழ்ச் சந்ததியைச் சேர்ந்த இளையோர்கள் தமது இனத்துவ அடையாளத்தைப் பேணும் விதம் குறித்து கருத்துப்பரிமாற்றங்கள் விவாதங்களை நடத்துவதற்கான ஒரு முயற்சி என சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக தமிழ்ப் பேரவையின் 33 ஆவது நிறைவேற்றுக்குழு தெரிவித்துள்ளது.

'தமிழ் இளையோர் அடையாளத்தை கற்பனைசெய்தல்' எனும் தொனிப்பொருளில் உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் இளையோர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கான களத்தை இம்மாநாடு வழங்கும்.

தமது கட்டுரையின் சுருக்கத்தை சிங்கப்பூர் நேரப்படி 2012 மார்ச் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் இளையோர்களை அப்பேரவை கோரியுள்ளது. இப்பேரவை 1975 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# குடும்பப் பொருளாதாரத் தன்னிறைவு; மனைப் பொருளாதார வேலைத்திட்டம்

## இம் மாதம் நாடெங்கிலும் நடவடிக்கை

(கொழும்பு)

திவிநெகும மனைப் பொருளாதார அலகுகளைத் தயாரிக்கும தேசிய வேலைத் திட்டம் நாடெங்கிலும் ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டிலும் மார்ச் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையும் இத்திட்டம் செயற்படுத்தப்படவிருக்கின்றது. இதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

திவிநெகும மனைப் பொருளாதாரத்தின் மூன்றாம் கட்டம் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி சுபவேளையில் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருப்பதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தபடி திவிநெகும தேசிய வேலைத திட்டத்தின் மூன்றாம் கட்டம் 25 இலட்சம் குடும்பங்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் 150 குடும்பங்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன. அதனால் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடங்கலான அரசாங்க உத்தியோகத்தர்கள் இன்று முதல் ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரில் சென்று இல்லத் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்த அலகுகளைத் தயாரிப்பார்கள்.

ஒவ்வொரு குடும்பத்தையும் பொருளாதார ரீதியாக சுய தன்னிறைவு அடையச் செய்யும் நோக்கிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. திவிநெகும தேசிய வேலைத் திட்டத்தின் பயனாக இலங்கை அரிசி, உழுந்து, சோளம் உற்பத்திகளில் தன்னிறைவு அடைந்துள்ளது. மரக்கறி வகைகளின் விலைகள் வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு திவிநெகும மனைப் பொருளாதார வேலைத் திட்டமே அடிப்படைக் காரணம் என்றும் அவர் மேலும் கூறினார்.

## கண்டியில் வெசாக் பண்டிகை

(கொழும்பு)

2012ஆம் ஆண்டின் அரச வெசாக் பண்டிகை கண்டியில் நடாத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சரான பிரதமர் தி.மு.ஜயரட்ன தலைமையிலான குழுவே இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைக்கமைய கண்டி சிறி தலதா மாளிகையைமையமாகக் கொண்டே இந்த அரச வெசாக் விழா இடம்பெறவுள்ளதாக புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# அமைச்சரவைக் கொள்கைகள் பின்பற்றப்படுவதில்லை



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அமைச்சரவையின் கொள்கைகள் பின்பற்றப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக சர்வதேசத்தினுள் அரசாங்கம் மீதான நம்பிக்கை இல்லாது போயுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மோசடி நபர்கள் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் பெண் ஒருவர் உட்பட இரண்டு சந்தேக நபர்கள் திக்வெல்ல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் 19 இலட்ச ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை மோசடி செய்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் சைப்பிரஸ ஆகிய நாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாகக் கூறியே பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வரவேற்புப் பெற்ற விளம்பரம்

(புத்தளம்)

புத்தளம் பஸ் நிலைய வளாகத்திற்குள் வெற்றிலை எச்சில் துப்பினால் 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என விளம்பரம் ஒட்டப்பட்டுள்ளது. இந்த விளம்பரம் பயணிகள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக புத்தளம் நகரசபை அறிவித்துள்ளது.

சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்போம் என்ற கருப்பொருளில் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் புத்தளம் நகர சபையின் அதிரடி நடவடிக்கையில் ஒன்றாகவே இது அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, கண்ட இடங்களில் வெற்றிலை எச்சில் துப்பி சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தியவர்கள் தற்போது கொஞ்சம் கவனமாகவே இருக்க வேண்டும். 10 ரூபா வெற்றிலைக்கு அபராதத் தொகையாக 500 ரூபாவை கொடுக்க வேண்டுமா? என்று நகரசபை கேட்டுள்ளது.

# எரிபொருள் விலையை குறைக்க ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

பல அமைப்புக்களை இணைத்துக் கொண்டு எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால் காந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இந்த ஆர்ப்பாட்டம் மூலம் சரியான தீர்வு கிடைக்கும் என்றார்.

# 'பிம்சவிய' காணிப்பதிவு இரத்தால் வீட்டுத்திட்டத்தை இழக்கும் அபாயம்

(கிளிநொச்சி)

காணிப்பதிவு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் வீட்டுத்திட்ட உதவிகள்பெறும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இடப்பெயர்வில் அதிக தாக்கத்தை எதிகொண்டு தற்போது மீள்குடியேற்றம பெற்றுள்ள மக்களே இந்தக் காணிப் பதிவுகள் இரத்து செய்யப்பட்டுள்ளதால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பம்சவிய காணிப்பதிவின் படி இலங்கை பூராகவும் காணிப பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கு எதிராக கூட்டமைப்பினர் மேற்கொண்ட நீதிமன்ற நடவடிக்கைகளை அடுத்து இந் நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இடப்பெயர்வுகளின் அதிக தாக்கத்தை எதிர்கொண்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து தமது சொத்துக்களையும், காணி உரிமம் போன்ற நிலையான சொத்துக்களின் ஆவணங்களையும் பறிகொடுத்து பெருமளவான மக்கள் தற்போதைய சமாதான சூழலில் தமது இடங்களில் மீள்குடியேறி நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். காணிப் பதிவு இரத்து நடவடிக்கையின்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அப்பாவி மக்க்ளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


தமது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு குடியிருப்பதற்கான வீடுகளை அமைக்கத் தமது காணிக்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத இக்கட்டான சூழநிலையில் வீட்டுத் திட்ட உதவிகளை இழந்து வருகின்றனர்.

இந்திய அரசாங்கத்தினாலும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் வீடில்லாத மக்களுக்கு வீடுகள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மக்கள் அரை ஏக்கர், கால் ஏக்கர் நிலங்கை வைத்துக்கொண்டு உரிமைப் பிரச்சினையால் போராடி மாழுகின்றனர். இவ்வாறான மக்களுக்கு பொன்னான வாய்ப்பாக 'பிம்சவிய' காணிப் பதிவுச் சட்டம் தீர்வாக அமைந்திருந்தது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கான தீர்ப்பின் காரணமாக வீட்டுத்திட்டப் பயன்பாட்டினை இழக்கும் அபாய நிலை உருவாகி இருப்பதனால் மக்கள் வழக்கிற்கு எதிராக விசனம் தெரிவிக்கின்றனர். (142)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நாளொன்றுக்கு 50 பைந் இரத்தம் தேவை



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாள் ஒன்றுக்கு 50 பைந் இரத்தம் தேவைப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வைத்தியசாலையின் இரத்த வங்கியின் கையிருப்பைப் பேணவும், அவசர தேவைக்கும் இரத்ததானம் செய்ய முன்வருவோர் இரத்ததானம் செய்ய முன்வருமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அநேகமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு விபத்துக்களின் மூலமாகவும் மகப்பேற்றுக்கு வருபவர்களுக்கும் புற்றுநோய் போன்றவற்றிற்கும் சிகிச்சை பெற வருபவர்களுக்குமே அதிக அளவான இரத்தம் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர் இந்நிலையினைப் போக்குமுகமாகவே இரத்ததானம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது இவ்வாறான கோரிக்கையை ஏற்று இராணுவத்தினரும், பொலிஸாரும் பெருமளவில் முன்வந்து இரத்ததானம் செய்ய முன்வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் ஏனையவர்களும் இவ்வாறு இரத்ததானம் செய்ய முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (பா)

# உயர்தரப் பெறுபேறு விவகாரம் ; பரிந்துரைகளுக்கு விரைவில் அங்கீகாரம்

(வவுனியா)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராய்நத நிபுணர் குழுவின் பரிந்துரைகளை செயற படுத்துவதற்காக அமைச்சரவையின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான நடைமுறைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் அவற்றை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகப் பரீட்சைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கையிலுள்ள அனைத்து பரிந்துரைகளையும் செயற்படுத்துவதற்கான நடைமுறைகள் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருந்தன. இந்தப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து எதிர் காலத்தில் அத்தகைய குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிபுணர் குழுவொன்றை நியமித்தார்.



இதற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட நிபுணர் குழு தமது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்ததுடன் பரீட்சைத் திணைக்களத்திற்கும் தமது பரிந்துரைகளை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோழி உற்பத்திகளுக்கு குவைத் நாட்டில் தடை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து கோழி இறைச்சி, கோழி முட்டை, கோழிக் குஞ்சு என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு குவைத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோழிக் காய்ச்சல் ஐயம் காரணமாகவே கோழி உறபத்திப் பொருட்களுக்கு தடைவித்தித்துள்ளதாக குவைத் அரசு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை அவுஸ்ரேலியாவிலிருந்தும் கோழி உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு குவைத் தடை விதித்துள்ளது.

# உயர் பொலிஸ் அதிகாரிகள் 58 பேருக்கு உடனடி இடமாற்றம்

(கொழும்பு)

58 உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் 35 பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் 12 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் எட்டு பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் இந்த இடமாற்றங்கள் வழங்கப் பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துளளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் குற்ற அறிக்கையிடல் பிரிவு, விசேட பாதுகாப்பு பிரிவு, அரச புலனாய்வு மற்றும் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவு மற்றும் தலைமையகம் ஆகியவற்றுக்காக புதிய பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகிய அநுரசேன நாயக்க, அசோக்க விஜயதிலக்க மற்றும் எஸ்.கே. சங்கர் ஆகியோரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சேவைகளுக்கான தேவையை கருத்திற்கொண்டு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இம் மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொளளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எச்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

புதிய பாடவிதானம் மற்றும் பழைய பாடவிதானங்களுக்கான விண்ணப்பங்கள் இதற்கமைய ஏற்றுக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார். பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

தனியார் விண்ணப்பதாரிகள் உரிய காலத்திற்குள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மற்றொரு இரத்தினக்கல் வளம் கதிர்காமத்தில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கதிர்காமம் - தம்மென்னாவ பகுதியில் இரத்தினக்கல் வளம் மிகுந்த மற்றுமொரு இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நிபுணர்கள் 6 பேர் அடங்கிய குழு ஒன்றே இந்த இடத்தை அடையாளங் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தக்குழு நேற்றுமுன் தினம் கதிர்காமம், தம்மென்னாவ பகுதியில் இரத்தினக்கல் வளம் மிகுந்த இடங்களை கண்டறிவதற் கான சேதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டது.



எனினும் நிலத்திற்கு கீழ் இன்னும் பல அடிகள் தமது சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கு மேலும் சில மாதங்கள் எடுக்கும் எனவும் அக்குழு தெரிவித்துள ளது.

# பொற்பதி சனசமூக நிலைய அபிவிருத்திக்கு நிதி திரட்டல்

(கொக்குவில்)

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொக்குவில் மேற்கு பொற்பதி சனசமூக நிலையத்தினர் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1968 ஆம் ஆண்டு தொடக்கம் பொற்பதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இயங்கி வருகிறது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக சில காலங்கள் தொடர்ந்து இயங்கவில்லை. பொற்பதி மக்களின் பொதுத் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டு சனசமூக நிலையத்தை மீளப் புனரமைத்து நடாத்துவதற்குத் தீர்மானித்தோம்.

16.12.2011 இல் உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுமதியுடன் தனியார் கட்டடம் ஒன்றில் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இப்பொழுது தினசரி பத்திரிகைகள் பல பொது மக்களின் பாவனைக்காக போடப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

சனசமூக நிலையத்துக்கு நிரந்தரமான கட்டடத்தைக் கட்டிப் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இக்கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த 7 ஆம் திகதி பொற்பதி விநாயகர் ஆலய வடக்கு பக்க வீதியோரமாக நாட்டப்பட்டுள்ளது.

இக்கட்டட வேலைகளைத் துரிதமாக்கி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அண்ணளவாக 10 இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பொற்பதி கிராமத்தின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் இணைந்து அறிவுரைகளையும், நிதியுதவிகளையும் மற்றும் ஏனைய வழிகாட்டல்களையும் மேற்கொண்டு செயற்பாட்டை சிறப்பாக்குவதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவட்ட வீட்டுத் தோட்டப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம்

விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்ட மட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வீட்டத்தோட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு,

கிராமிய வீட்டுத்தோட்டப்போட்டி

சின்னகுட்டி கந்தசாமி (படித்த மகளிர் திட்டம், மிருசுவில்), எஸ்.போல் துரைநாயகம் (சிறுவிளான், இளவாலை), வி.கிருஸ்ணகோபால் (குரும்பைகட்டி, புலோலி வடமேற்கு)

பாடசாலை வீட்டுத்தோட்டப்போட்டி

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ். விக்கினேஸ்வரா கல்லூரி, யாழ். கோண்டாவில் இராமகிருஷண மகாவித்தியாலயம்.

பாடசாலை மாணவர் வீட்டுத்தோட்டப்போட்டி

கே.தர்சினி (சுழிபுரம்), எஸ்றேனுஜன் (அத்தாய், அல்வாய்), வி.யசோதரன் (வெள்ளைபுத்தடி, அல்வாய் வடமத்தி)

அலுவலக வீட்டுத் தோட்டப்போட்டி

பிரதேச செயலகம் (சங்கானை), பிரதேச. செயலகம் ( சண்டிலிப்பாய்), பிரதேச சபை ( நல்லூர்)

அலுவலரின் உத்தியோக பிரத்தியேக வதிவிட வீட்டுத்தோட்டப் போட்டி- இராசரத்தினம் ஸ்ரீரஞ்சன் (சுழிபுரம் மேற்கு),செல்வி. ரி.மஞ்சுளா தேவி (அல்வாய் கிழக்கு, அல்வாய்), கே. விஜயரட்ணம் (யாழ்).

# கூட்டமைப்பைக் குலைக்கும் ஜெனீவா குழப்பங்கள்?

-என். சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.

ஜெனீவா நகரில் நடைபெறும் ஐநா அமைப்பு கூட்ட நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை, பன்னாட்டு பிரதிநிதிகளை சந்தித்து இலங்கை அரசுக்கு எதிரான "போர் குற்றங்கள்" மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளையும் மீண்டும் வலியுறுத்துவது என்ற கருத்து இடைப்பட்ட காலத்தில் உருவாகி வருவதாக பத்திரிகைச் செய்திகள் கூறின.

ஆனால், அவ்வாறு செய்வதானால், அது இலங்கையில் இருக்கும் தமிழ் மக்களையே பாதிக்கும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார். அதுவே வீணாக மீண்டும் இனத் துவேஷத்தையும், தமிழ் மக்கள் மீதான வன்முறையையும் மீண்டும் கட்டவிழ்த்துவிடும் என்றும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளதில் உண்மை இருக்கிறது. எனவே, ஜெனீவாவிற்கு கூட்டமைப்பு, பிரதிநிதி யாரையும் அனுப்பி வைக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், சம்பந்தன் கூறியுள்ளது அவரது தனிப்பட்ட கருத்து என்றும் அதனை கூட்டமைப்பின் "தேசிய பட்டியல்" நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் மட்டுமே ஆதரிப்பதாகவும் அதன் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் கூறியுள்ளதாக, பின்னர் வந்த பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. சுரேஷின் கூற்றை மற்ற கூட்டமைப்பு தலைவர்கள் ஆதரிக்கிறார்களா, அல்லது சம்பந்தனின் நிலைப்பாட்டை ஒட்டி ஜெனீவாவிற்கு செல்லாமல் இருக்கப் போகிறார்களா என்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

இந்தப் பிரச்சினையால், கூட்டமைப்பு உடையுமா என்பது அல்ல கேள்வி. இது போன்றே, "நித்திய கண்டம், பூர்ண ஆயுள்" என்ற நிலையில் கூட்டமைப்பு எத்தனை காலம் தான், உள்கட்சி குழப்பங்களை மூடிமறைத்து, காலம் தள்ள முடியும் என்ற கேள்வியே முன்னிற்கிறது.

ஒருவிதத்தில் சுரேஷ் பிரேமசந்திரனின் கருத்தையே மற்றொரு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரனும் பிரதிபலித்துள்ளார். ஜெனீவாவிற்கு பிரதிநிதி குழு ஒன்றை அனுப்பி வைப்பது தான் கூட்டமைப்பின் முடிவாக இருந்தது என்று அவர் கூறியுள்ளார்.

எனவே, அந்த முடிவை மாற்றி அமைக்கும் போதும் அதுபோன்றே கூடி பேசி முடிவு எடுத்திருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்திருக்கிறார். மாறாக, சுமந்திரன் கட்சி தலைமைப் பீடத்தின் முடிவை தனக்கு தொலைபேசி ஊடாக தெரிவித்ததாகவும் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

ஒரு புறம், தலைமைப் பீடம் எதனைக் கண்டாவது பயந்து விட்டதா, அல்லது அழுத்தங்களுக்கு உள்ளாகி விட்டதா என்ற கேள்வியை அவர் எழுப்பி உள்ளார். என்றாலும், கட்சி தலைமைப் பீடம் கூறுவது போல், தற்போதுள்ள சூழலில் கூட்டமைப்பு பிரதிநிதி குழு ஜெனீவாவிற்குச் சென்றால் அதனால் இலங்கையில்



உள்ள தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்பதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதற்கும் ஒருபடி மேலே போய், ஜெனீவாவில் அரசுக்கு எதிரான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால், அதனால் ஏற்படும் உள்நாட்டு அரசியல் நிலைமையை கூட்டமைப்பு எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என்றும் அவரே கேள்வி எழுப்பியுள்ளார்.

கூட்டமைப்பின் தற்போதைய முடிவை சம்பந்தன் அறிவித்தபோது, அதன் தலைமைப் பீடத்தின் பிற உறுபபினர்கள் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம அடைக்கலநாதன் ஆகியோர் தமிழ்நாட்டில் இருந்துள்ளனர். இதனைக் குறிப்பிட்டுள்ள அரியநேத்திரன், அவர்கள் நாடு திரும்பியதும் ஜெனீவா விஜயம் குறித்து கூட்டமைப்புக்குள் பேசப்படும் என்று கூறியுள்ளார்.

இது, கூட்டமைப்பு தலைமைப் பீடத்தில் சம்பந்தனும் சுமந்திரனும் ஒற்றைப்படுத்தப் படப் போகிறார்களா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அல்லது எப்போதும் போலவே, அவர்கள் அனைவரும் கூடி, பேசி பின்னர் கலையப்போகிறார்களா என்பதும் தெரியவில்லை.

ஜெனீவா விஜயம் குறித்து, சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் கூறியுள்ள கருத்துகள் நிதர்சனமானது. இனப்போர் காலகட்டத்தில் அப்பாவித் தமிழர்களின் வேதனை குறித்து அனைவரும் அறிவோம். ஏன், அது குறித்துத்தான் ஜெனீவா கூட்டத்திலும் உலக நாடுகள் பேசவுள்ளன.

அதே சமயம், விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் பாதிக்கப்பட்ட, பயமுறுத்தப்பட்ட சிங்கள மக்களின் உணர்வுகள் சரியாகப் பிரதிபலிக்கப்படவில்லை. மாலையில் தன்னோடு இருந்த நண்பனை சிலமணி நேரத்தில் சதையும் பிண்டமுமாக காண நேர்ந்த இராணுவ வீரனோ அல்லது பொலிஸ் காரனோ, தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பயந்து வருடக்கணக்காக தனித்தனி பேருந்துகளில் ஒரே இடத்திற்குப் பயணித்து வந்த அப்பாவி குடும்பங்கள், போர்ப் பகுதிகளில் உள்ள தமிழ மக்களுக்கான அன்றாடத் தேவைகளை முறையாக அனுப்பியும் அவற்றைக் கைப்பற்றி விட்டு அந்த மக்களை ஆண்டாண்டு காலம் பட்டினி போட்ட இயக்க தலைமையை எதிர்கொள்ள முடியாத அரசு அலுவலர்கள், இவர்களும் கூட சிங்கள இனத்தின் பிரதிபலிப்பே.

அது போன்றே, 1983ஆம் ஆண்டின் இனவெறிப் படுகொலையை மனப்பூர்வமாக விமர்சித்துவிட்டு, அது போன்ற விதத்தில் மிதவாத தமிழ் கட்சித் தலைமை ஏன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சாடவில்லை என்று மனம் குமைந்த சிங்கள அறிவுஜீவிகளும் அரசியல் தலைவர்களும் கூட இந்த பட்டியலில் அடங்குவர்.

இத்தகைய சராசரி மக்களே இந்த அரசுக்கும், இதற்கு முன்பு பதவியில் இருந்தோருக்கும் அடித்தளமாக இருந்துள்ளனர். "சிங்களப் பேரினவாதம்" இவர்களது வாக்குகளை குறிவைத்தே தொடங்கப்பட்டது. ஆனால், இன்று அது விடுதலைப் புலிகள் குறித்த பயம் மற்றும் தொடரும் சந்தேகங்களின் அடிப்படையிலேயே உயிர்த்து நிற்கின்றது.

அண்மைக் காலங்களில் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் அதிகாரப் பகிர்வு குறித்துப பேசும்போது கூறிவரும் சில கருத்துக்கள், "புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது" என்ற கருத்தையே சிங்கள மனதில் தோற்றுவித்துள்ளது.

தாங்கள் போர் முகத்தில் விட்டுவிட்டு வந்த அப்பாவித் தமிழர்களுக்காக 'அயல்நாடுகளில் குடியேறிவிட்ட தமிழ் சமூகம் விடும் கண்ணீர், ஜெனீவா ஊர்வலங்களில் அவர்கள் ஏந்திச் செல்லும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடி ஆகியவை, இத்தகைய எண்ணங்களுக்கு சிங்கள மக்களின் மனங்களில் வலுச்சேர்க்கிறது. இதுவே அரசின் நிலைப்பாடுகளுக்கு உரம் சேர்க்கிறது. ஏன், அதற்கு அடிப்படையாகக் கூட அமைந்துவிடுகிறது.


கூட்டமைப்பை பொறுத்தவரை, இனப்போர் முடிந்த காலகட்டம் முதலே அதன் உள்கட்சிப் பிரச்சினைகளும், கொள்கைக் குழப்பங்களும் தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு விடிவுகாலமாக அமையவில்லை. மாறாக, தனி மனித தலைமைத்துவ விவகாரங்களுக்கே அவை வடிகாலாக அமைந்துள்ளன.

இனப்போர் முடிந்ததைத் தொடர்ந்து நடந்த ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிட வேண்டுமா, அல்லது சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டுமா, என்பதில் தொடங்கி, நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்த கூட்டமைப்பின் நிலைப்பாடுகளில் அடுத்தடுத்து குழப்பங்களே கூடியுள்ளன.

இனப்போர் முடிந்த காலம் தொட்டு கூட்டமைப்பின் தேர்தல்கால உத்திகள், தலைமைப் பீடத்தை அலங்கரிக்கும் ஒருசில தலைவர்களின் தனிப்பட்ட விருப்பு - வெறுப்புகளின் அடிப்படையிலும் அவர்களது எதிர்கால தலைமைத்துவ ஆவல்களையும் உள்ளடக்கியே வந்துள்ளமை கண்கூடு. இது அடுத்த கட்டத்தை தற்போது அடைந்துள்ளது.

## திருடனை திருடனால் ஒழிப்போம்

திருடன் பெரியவனா பூட்டு பெரிதா என்று கேட்டால், போதுமான அவகாசம் கிட்டினால் திருடன் வெற்றி




பெறுவான் என்பதுதான் பதிலாக இருக்கும். பூட்டை வெவ்வேறு சாவிகளைக் கொண்டு சோதித்து அதன் தன்மையைப் புரிந்து கொண்டு அவன் அதைத் திறந்தே தீருவான். இது போன்ற ஒரு சவாலை மருத்துவத்துறையும் எதிர்கொண்டு நிற்கிறது.

நோயெதிர்ப்பு மருந்துகள் (Antibiotics) கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில் அதை எதிர்த்து எந்த பற்றீரியாவாலும் நிற்க முடியவில்லை. ஆனால் இயற்கை எதையும் ஒரே மாதிரியே தொடர்ந்து செய்வதில்லை: அதன் இயக்கம் நிகழ்தகவு சாத்தியங்கள் அனைத்தையும் முயற்சி செய்வதாக இருப்பதால், அது தன்னைக் குலைத்துக் கொண்டே முன்னேறுகிறது.

அங்கங்கு ஒன்று இரண்டு அன்ரிபயொற்றிக்களால் அழிக்க முடியாத மரபணுக்கள், தப்பிப் பிழைத்த பற்றீரியாக்கள், மற்ற பற்றீரியாக்கள் கொல்லப்பட்ட நிலையில் தங்கள் மக்கள்தொகையைத் தீவிரமாக விருத்தி செய்து கொண்டுவிட்டன. இவற்றால் மாற்று வடிவு கொண்டு விட்ட பலவித தொற்று நோய்களிடம் இன்றுள்ள அன்ரிபயொற்றிக்கள் தோல்விடையத் தொடங்கி மருத்துவத்துறைக்கு பெரும் தலைவலியாக இருக்கிறது.

இந்நிலையில் காரி முல்லிஸ் என்ற ஆராய்ச்சியாளர் ஒரு புரட்சிகரமான தீர்வை முன்வைக்கிறார். திருடனுக்குத் தடுப்பாக பூட்டை உருவாக்குவதற்கு பதில், திருடனைக் காட்டிக் கொடுக்கக்கூடிய ஆள்காட்டிகளை உருவாக்குவது தான் இந்தத் திட்டம். நம் உடலின் எதிர்ப்பு சக்தியால் வெற்றி கொள்ளப்படக்கூடிய மூலக்கூறுகளைப் பயன்படுத்தி தொற்றுநோய்க் கிருமிகளை ஒழிக்க முடியும். இந்த மூலக்கூறுகள் (மாலிக்யூல்ஸ்) தொற்றுநோய்க் கிருமிகளாகப் பார்த்து அவற்றிடம் போய் ஒட்டிக் கொள்ளுமாம். அதையடுத்து மூலக்கூறுகளை அடையாளம் காணும் எதிர்ப்பு சக்தி, மூலக்கூறுகளுடன் சேர்த்து அவற்றுடன் ஒட்டிக் கொண்டிருக்கிற நச்சுயிரிகளையும் அழித்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அறிவியல் புனைவுகள்




சமீபத்திய பத்தாண்டுகளில் அறிவியல் ,கதைகள் புனைவிலக்கியங்களில் மையத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றன. உலக அளவில் நாவல்கள், சிறுகதைகள் ஆகிய இரண்டுமே பல வகை எழுத்தாளர்களால் பொதுப் பத்திரிகைகளிலும், பெரும் பிரசுரங்களுக்கும் எழுதப்படுகின்றன.

அதே போல ஹொலிவுட் முன்பு சாகசக் கதைகளை மட்டுமே அறிவியல் நவீனம் என்ற பெயரில் எடுத்துக் கொண்டிருந்தது. இப்போது மாற்றுலகு குறித்த கற்பனைகள், உளநிலை பிறழ்வு குறித்தவை, சோதனைச்சாலை விபத்துகளால் நடக்கும் பல பிரச்சினைகள் என்று விளிம்பில் இருந்த புனைவுகளை வைத்து மையத்து நட்சத்திரங்கள் நடிக்கும் படங்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றது.

பிற ஐரோப்பிய நாடுகளில் கூட குறைந்த பட்ஜெட்களில் எடுக்கும் தயாரிப்பாளரும் இப்போது அறிவியல் நவீனங்களை, புனைவுகளைப் படமாக்க முன்வருகின்றனர்.

சில மாதங்கள் முன்பு கண்டேஜியன் என்ற ஒரு திரைப்படம் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து தற்போது நிறைய அறிவியல் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கெனவே பல வகையான அறிவியல் நவீனங்களும் மாற்று எதார்த்தக் கதைகளும். எழுதிப் பிரசுரிக்கப்படுகின்றன. அவை உடனுக்குடன் ஹொலிவுட்டில் படமாக்கவும் படுகின்றன.

## அரிதான இளஞ்சிவப்பு வைரக்கல் அவுஸ்ரேலியாவில் கண்டுபிடிப்பு



உலகில் மிக அரிதான இளஞ்சிவப்பு நிற வைரக்கல் அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்கு அவுஸ்ரேலியாவின் கிழக்கு கிம்ப்லி பகுதியிலுள்ள வைர சுரங்கத்திலிருந்தே இந்த வைரக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 12.76 கரட் கொண்ட இந்த வைரக்கல் பல மில்லியன் டொலர் பெறுமதியானது என கருதப்படுகிறது. இந்த வைரக்கல் பட்டை தீட்டுவதற்காக பேர்த் நகருக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 10 நாட்களில் பட்டை தீட்டப்பட்டு கண்காட்சிக்காக சர்வதேச அளவில் அனுப்பப்படவுள்ளது. தொடர்ந்து இந்த ஆண்டு இறுதியில் ஏலம் விடப்படும் என வைரக்கல்லை கண்டுபிடித்த சுரங்க நிறுவனம் கூறியுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டு 24. 78 கரட் கொண்ட இளஞ்சிவப்பு வைரக்கல் ஒன்று ஜெனவாவில் ஏலம் விடப்பட்டது. அதனை பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் 46 மில்லியன் டொலருக்கு வாங்கினார். இதுவே உலகில் அதிக தொகைக்கு ஏலம்போன ஆபரணமாக சாதனையிலுள்ளது.




# The Artist – மோசமான ஒஸ்கார் படம்

பல நாட்களாகவே, இந்தப் படத்தைப் பற்றிப் பல விஷயங்கள் கேள்விப்பட்டுக்கொண்டே இருந்தேன். அத்தனையுமே, இது ஒரு முதல்தர படம், இதுவரை இப்படியொரு படம் வந்ததில்லை, அற்புதம், அபாரம் என்ற முறையிலேயே இருந்தன. ஆகவே, இயல்பாகவே, இப்படத்தைப் பார்க்கும் ஆர்வம் எனக்கு இருந்தது. கடைசியாக, படத்தைப் பார்த்தே விட்டேன்.

ஹொலிவுட்டில் Silent Films என்று அழைக்கப்பட்டுவந்த 'ஊமைப்படங்கள்' வெளிவந்த காலங்களில், பல சூப்பர்ஸ்டார்கள் சிறந்து விளங்கினர்.

'சைலண்ட் எரா' என்று அழைக்கப்பட்டு வந்த காலம் - 1894 முதல் 1929 வரை. இந்தக் காலகட்டம் வரை, குரல் என்பது திரைப்படங்களுக்குத் தேவையே இல்லாத விஷயமாகவே இருந்துவந்தது. நடிகர்களின் உடல்மொழி மட்டுமே திரைப்படத்துக்குத் தேவைப்பட்டது.

இப்படி இருந்த காலத்தில், பிரபல சூப்பர்ஸ்டார்களாக விளங்கியவர்கள் பலர். ஆங்கிலமோ அல்லது வேறு மொழிகளோ தெரியாமல் இருந்தால் கூட, நல்ல முகவெட்டு இருந்தால் ஒரு திரைப்படத்தில் நடித்துப் பேர் வாங்கி விடலாம்.

முதல் உலகப்போர் வரையிலும், ஐரோப்பா - குறிப்பாக ஃப்ரான்ஸே இந்த மௌனப்படங்களில் சிறந்து விளங்கிவந்தது என்ற செய்தி, ஹொலிவுட் ரசிகர்களுக்கு சற்றே வியப்பாக இருக்கலாம். அதுதான் உண்மை. உலகப்போர், ஐரோப்பாவின்மீது தீவிரமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியதால், திரைத்தொழில் அங்கே வலுவிழந்தது.

நமது 'ஹாய்' மதன், அடிக்கடி கமலின் நகைச்சுவையை 'பஸ்டர் கீட்டன்' (Bustor Keaton) என்ற நடிகரோடு ஒப்பிடுவதை, மதன் விசிறிகள் அறிந்திருக்கலாம். இந்த பஸ்டர் கீட்டன், ஹொலிவுட்டின் புகழ்பெற்ற மௌனப்பட நடிகர். இவரோடு சேர்ந்து பிரபலமானவர், சார்லி சாப்ளின்.

அதிரடி ஆக்‌ஷன் படங்களின் சூப்பர் ஸ்டாராக விளங்கியவர், டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் (Douglas Fairbanks). ரொமான்ஸில் அசத்திய க்ளாரா போ (Clara Bow) என்ற நடிகை, மற்றொரு பிரபலம். இந்தக் காலத்தில் - அதாவது 1920களில், ஹொலிவுட், வருடத்துக்கு 800 படங்களைத் தயாரித்து வெளியிட்டுக கொண்டிருந்தது. அத்தனையும் மௌனப்படங்களே.

மௌனப்படங்கள் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில்தான் ஒலியின் புரட்சி தொடங்கியது. 1890களிலிருந்தே எடிசன் கம்பெனியினர் ஒலியில் பல பரிசோதனைகள் நிகழ்த்திக் கொண்டிருந்தாலும், ஹொலிவுட்டில் ஒலி மெதுவாகத்தான நுழைந்தது. இதற்குப் பல காரணங்கள். முதலாவது, ஒலியின் அவசியம அங்கே தேவைப்படவேயில்லை. இரண்டாவது, நடிகர்களின் ஈகோ. மூன்றாவது, ஒலிக்குத் தேவைப்பட்ட பெரும் பணம்.

இத்தனை தடைகளையும் மீறி, The Jazz Singer (1927) படத்தின் ஒருசில காட்சிகளில் ஒலியைப் புகுத்தியது வோர்னர் ப்ரதர்ஸ் நிறுவனம். ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வசனங்கள் மற்றும் இசை ஆகியவற்றை வெற்றிகரமாக மௌனப் படங்களின் பின்னணியில் புகுத்தியது. அது, பெருவெற்றியும் அடைந்தது.

ஆனால், இதில் மௌனப்படங்களில் கோலோச்சிவந்த நடிகர்களின் பாடு திண்டாட்டமாகிப்போனது. காரணம், பெரும்பாலானவர்கள் ஆங்கிலம் சரியாகத் தெரியாதவர்கள். உச்சரிப்பு சுத்தம் இல்லாதவர்கள். ஆகவே, இவர்களுக்கு ஆங்கில ட்யூஷன் வகுப்புகள் தொடங்கப்பட்டன. பல நடிகர்கள், ஒலிக்குத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, சொந்தமாகவே மௌனப்படமெடுத்து வெளியிடத் தலைப்பட்டு, அதனால் அவர்களின் வாழ்க்கையே தொலைந்து போன கதைகளும் உண்டு.

1927இல் நுழைந்த ஒலி, இரண்டே வருடங்களில் ஒரு இன்றியமையாத இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது. ஒலிக்குத் தக்கவாறு தங்களை மாற்றியமைத்துக்கொண்ட சில பிரபல ஸ்டார்களைப் பற்றிச் சுருக்கமாக:

**க்ரேட்டா கார்போ (Gretta Garbo)** - 1925இல் ஹொலிவுட்டில் அறிமுகமான கனவுக்கன்னி. மொத்தம் பத்து மௌனப்படங்களில் தலைசிறந்து விளங்கி, பலரது தூக்கத்தையும் வசனமே பேசாமல் கெடுத்தவர். ஒலி உள்ளே நுழைந்தபிறகும், இவரது ஸ்வீடிஷ் ஆங்கிலம், படத்தின் வசூலைப் பாதிக்கும் என்று கருதிய MGM, இவரது படங்களை மட்டும் மௌனப் படங்களாகவே எடுத்துத் தள்ளியது. அத்தனையும் சூப்பர்ஹிட்.

ஒருவழியாக, ஒலியின் அவசியத்தைப் புரிந்துகொண்ட MGM, 'அன்னா க்ரிஸ்டி' (Anna Christie) என்ற படத்தில், 1930இல், கார்போவைப் பேசவைத்தது. இப்படத்துக்கு MGM கையாண்ட விளம்பர உத்தி, இன்றும் பேசப்படும் ஒன்று. "Garbo Talks!" என்ற இரண்டே வார்த்தைகள், அமெரிக்காவெங்கும் பரப்பப்பட்டன. தங்களின் கனவுக்கன்னி முதன்முதலாகப் பேசப்போகும் ஆசை வார்த்தைகளைக் கேட்க யாருக்குத்தான் மனமிருக்காது? மக்கள் வெள்ளம் படையெடுக்க, மௌனப்படங்களின் காலத்திலிருந்து ஒலிக்குத் தன்னை மாற்றியமைத்துக் கொண்ட கார்போவைத் தொடர்ந்தது வெற்றி.


சார்லி சாப்ளின்


கீட்டன்


க்ரேட்டா கார்போ


டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ்

**டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் (Douglas Fairbanks)** - மௌனப்படங்களின் படையெடுப்பின் போது, புகழின் உச்சத்தில் விளங்கியவர். ரொபின்ஹூட், மாஸ்க் ஓஃப் ஸோரோ, தீஃப் ஓஃப் பாக்தாத் ஆகிய படங்களில் அதிரடியாக நடித்து மக்களைக் கவர்ந்தவர். மக்களின் பேராதரவைப் பெற்றிருந்த எம்.ஜி.ஆர் போன்று விளங்கியவர். சார்லி சாப்ளினோடு சேர்ந்து யுனைடட் ஆர்டிஸ்ட்ஸ் (United Artists) நிறுவனத்தைத் தொடங்கியவர். ஒஸ்கார் தொடங்கிய வருடமான 1927இல், Motion Picture Academy of Arts and Sciences தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் ஒஸ்கார்களை வழங்கியவர்.

இத்தனை பெருமைகள் இருந்தும், ஒலியின் வருகை இவரைப் பதற்றத்துக்குள்ளாக்கியது. ஒலிப்படங்கள் புகழ்பெறத் துவங்குகையில், மெதுவே திரையுலகை விட்டு ஒதுங்கியிருக்கத் தொடங்கினார். உடல்நிலை மோசமாக ஆரம்பித்தது இன்னொரு காரணம். 1929இல் Taming of the Shrew என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தின் திரையாக்கத்தில், முதன்முறையாக வசனம் பேசி நடித்தார். அது ஃப்ளாப் ஆனது. உற்சாகம் இழந்த ஃபேர்பேங்க்ஸ், இன்னும் சில படங்களில் நடித்துவிட்டு இறந்துபோனார்.

மௌனப்பட உலகின் இன்னுமொரு உதாரணமான சார்லி சாப்ளின், ஒலிப்படங்கள் பெருமளவில் ஹிட்டான 1930களிலும் பிடிவாதமாக மௌனப்படங்களையே எடுத்துவந்தார். அவையும் ஹிட்கள்தான். ஒலி அறிமுகமான 1929இல் இருந்து, 1940 வரை, பதினொரு வருடங்கள் மௌனப்படங்களை மட்டுமே எடுத்து வெளியிட்டுக்கொண்டிருந்தார் சாப்ளின்! காரணம், "வார்த்தைகள் ஒரு விஷயத்தைத் தவறாகவே புரிந்துகொள்ள உதவுகின்றன" என்ற சாப்ளினின் கோட்பாடுதான்.

கூடவே, அவரே அவரது படங்களைத் தயாரித்ததால், எந்த ஸ்டுடியோவின் நிர்ப்பந்தங்களும் அவருக்குத் தடையாக இருக்கவில்லை. ஒருவழியாக, மௌனப்படங்கள் அழிந்தே விட்ட 1940இல், சாப்ளின் முதன்முதலாக நடித்த ஒலிப்படம் - எவராலும் மறக்க இயலாத படம். அதுதான் 'The Great Dictator'.

இப்படி, மௌனப்படங்கள் ஹொலிவுட்டில் ஏற்படுத்திய தாக்கத்தை முழுமையாகப் புரிந்துகொண்டால்தான 'The Artist' படத்தைப் பற்றி நாம் தெளிவாகப் பார்க்க முடியும். ஏனெனில், ஆர்ட்டிஸ்ட் படம், ஒரு ஆவணப்படத்தைப் போன்று, ஹொலிவுட்டின் புகழ்பெற்ற, மறக்கடிக்கப்பட்ட அந்தக் காலத்தைப் பதிவு செய்கிறது.

நான் மேலே சொல்லியிருக்கும் விஷயங்களின் கலவையே அதன் கதை. மௌனப்படங்கள் எடுக்கப்பட்ட காலத்தில், ஹொலிவுட்டில் ஃபேர்பேங்க்ஸ் போலப் புகழுடன் விளங்கும் ஒரு நடிகன். ஒலிப்படங்கள என்று அழைக்கப்பட்ட 'டோக்கிகள்' பிரபலமாகத் தொடங்கியபோது, க்ரேட்டா கார்போவைப் போல் புகழுடன் விளங்கும் ஒரு நடிகை. இந்த இருவருக்கும் இடையில் ஏற்படும் காதல். கதாநாயகன் ஒலிப் படங்களை மறுதலிக்கிறான் அதனால சொந்தமாகவே மௌனப்படம் எடுத்து நொடித்துப்போகிறான். கதாநாயகி பெரும் புகழ் அடைகிறாள். இறுதியில் என்ன ஆகிறது என்பதே கதை.

மிக மெதுவாக நகர்கிறது படம். ஆரம்பத்தில் கதாநாயகனான ஜோர்ஜ் வலண்டின், மௌனப்படங்களில் நடிப்பதைக் காட்டுகிறார்கள். ஆனால், அதற்காக, அக்காலத்தில் நடைபெற்ற கதைகளைப் போலவே படு ஸ்லோவாகவே காட்டுவதால், படம் ஆரம்பித்த சில நிமிடங்களில் சுவாரஸ்யம் குன்றிவிட்டது.

அதுமட்டுமல்ல, படத்தில் சுவாரஸயமான சம்பவம் என்று எதுவுமே இல்லாததும் ஒரு காரணம். ஆவணப் படம் ஒன்றை இயக்கும் போர்வையில தான் இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், திரைக்கதையின் சார்பில், இப்படத்தில், பிரமாதம் என்று சொல்ல எதுவுமே இல்லை. ஆரம்பத்தில் தொடங்கிய அலுப்பு, படம் முழுமையும் நீடித்தது. இந்தப்படம் எப்போது முடியும என்று எதிர்பார்க்கத் தொடங்கினேன்.

இப்படத்துடன் ஒப்பிட்டால், கமல் நடித்த 'பேசும்படம்' ஒரு க்ளாஸிக் என்றே சொல்லிவிடுவேன். அந்த அளவுக்கு, பேசும்படத்தில் கதை இருந்தது. இதில் கதை டோட்டலாக மிஸ்ஸிங். வெறும் நொஸ்டால்ஜியாவுக்காகவே ஒருவேளை இது ஒஸ்கார் வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி வாங்கினால், கடந்த சில வருடத்தின் மோசமான ஒஸ்கார் படமாக இது விளங்கும் என்பது என் தாழ்மையான கருத்து.

ஒருவேளை தப்பித்தவறி Artist படத்துக்கு ஒஸ்கார்கள் கிடைத்து விட்டால்....? அடப்போங்கய் யா... நம்மூர் ஏழாம் அறிவு, ஹொலிவுட்டுக்குப் போட்டியாக எடுக்கப்பட்ட படம் என்று ஒருகாலத்தில் விளம்பரப் படுத்தப்பட்டதே? அதைப்போன்ற ஜோக்காக எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

**- கருந்தேள் கண்ணாயிரம்.**

# பொது நூலகங்களின் அவசியம்?



விவேகானந்தா கல்லூரி நூலகத்தில் ஒரு மாடி முழுவதும் நிறைய அலுமாரிகள், அது பி.ஜி மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் மட்டும்தான் என்று அடைத்திருந்தார்கள். அந்த அலுமாரிகளில் இருந்த புத்தகங்கள் எல்லாம் டி.டி.கிருஷ்ணமாச்சாரி என்ற முன்னாள் மத்திய நிதி அமைச்சர் கல்லூரிக்குத் தன் நூலகத்தைத் தானமாகக் கொடுத்ததால் கிட்டிய புத்தகங்கள். எத்தனை என்றால் சில ஆயிரம் புத்தகங்கள்.

அவற்றில் ஒரு பிரச்சினை. அவை பெரும்பாலும் 1930-50 வரை இருந்த காலகட்டப் புத்தகங்கள். பலவும் நூலகத்தை விட்டு எடுத்துப் போக முடியாத அளவுக்கு உளுத்துப் போயிருந்தன. ஒரு முறை அந்தப் புத்தகத்தில் திகதியை ரப்பர் ஸ்டாம்ப் போட நூலகர் ஒரு அழுத்து அழுத்தினார், அப்படியே ஸ்டாம்ப் பல பக்கங்கள் உள்ளே போய் விட்டது பொடிந்து விட்ட புத்தகம். அவர் அதை குப்பையில் போட இருந்தார். நான் சொன்னேன், "படித்து விட்டுக் கொடுக்கிறேன் அப்புறம் போடுங்கள்," என்று. சரி என்று கொடுத்தார்.

இப்படி பல புத்தகங்களைக் கொண்டு போய்ப் படித்து விட்டு வந்து திரும்பக் கொடுப்பேன், என் கண்முன் அவற்றை இரண்டாக உடைப்பார். நடு முதுகில் இல்லை. அட்டையோடு அப்படியே உடைத்தால் உடைந்து விடும் அப்புத்தகங்கள்.

இதே போல மத்திய நூலகத்திலும் புத்தகங்களைத் தேடித் தேடி எடுப்பேன். அங்கோ ஒரு வரிசையும் இராது. டூவி முறையில் ஏதேதோ கணக்கில் பல சங்கேதச் சொற்களால் புத்தகங்கள் குறிக்கப்பட்டு அடுக்கப்பட்டிருக்கும். ஊகமாகப் புத்தகங்களைக் கண்டுபிடிக்க முடியாது. ஒவ்வொரு புத்தகத்தையும் போய் கால் நம்பர் தேடி எடுத்து பின் கண்டுபிடிப்பது என்பது மிகவும் சுத்தி அடிக்கிற முறை. ஆனால் அதுதான் அறிவியல் பூர்வமான அல்லது தர்க்க பூர்வமான முறை.

அந்த முறையை உலகளவில் பெரிதும் முன்னேற்றியவர் ரங்கநாதன் என்ற சென்னைப் பல்கலைக்கழக நூலகர் என்பார்கள். சென்னைப் பல்கலை நூலகத்தைப் பயன்படுத்த முயன்றவர்களுக்குத் தெரிந்திருக்கும் அது எப்படி பல பத்தாண்டுகளாக முன்னேறாமல் அப்படியே இருக்கிறது என்று.

கன்னிமாரா, மத்திய நூலகம், பிரிட்டிஷ் கௌன்சில், அமெரிக்க தூதரக நூலகம் மட்டும் இல்லை என்றால் என் சென்னை வாழ்வு பயங்கர தண்டமாக இருந்திருக்கும். இதெல்லாம் என் கல்லூரி நாட்களின் விவரணை. இன்று நிலைமை முன்னேறி இருக்கிறதா என்றால் இராது என்று ஊகிக்கிறேன். தொலைக்காட்சிகளும், வலையுலகும் வந்த பின் பழைய புத்தகங்களை யாரே தேடிப் படிக்கப் போகிறார்?

**- மைத்ரேயன்**

## இந்தியச் செய்திகள்

# கச்சதீவு திருவிழாவினை முன்னிட்டு இலங்கை அகதிகள் வெளிச்செல்லத்தடை

(இராமேஸ்வரம்)

கச்சத்தீவு புனித அந்தோனியார் கோயில் திருவிழாவில் கலந்துகொள்ள தமிழகத்தில் இருந்து 4 ஆயிர்த்து 283 பேர் இன்று ஏராளமான படகுகளில் புறப்பட்டுச் செல்கின்றனர்.

இதேவேளை மண்டபம் அகதி முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்கள் 4 ஆம் திகதி வரை வெளியே செல்ல அனுமதியில்லை என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

கச்சத்தீவில் புனித அந்தோனியார் கோயில் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று சிறப்புப் பிரார்த்தனையும், நாளை தேர்ப்பவனி மற்றும் கொடியிறக்கும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

இந்த ஆண்டு கச்சத்தீவு திருவிழாவில் கலந்து கொள்ள 4 ஆயிரத்து 283 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 3 ஆயிரத்து 788 பேர் 106 விசைப்படகுகளிலும், 495 பேர்



இன்ஜின் பொருத்திய நாட்டுப் படகுகளிலும் செல்கின்றனர்.

கச்சத்தீவு செல்பவர்கள் அனைவரும் இன்று காலை 4.30 மணி முதல் இராமேஸ்வரம் துறை முகப்பகுதியில் இருந்தே செல்லவேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். வேறு இடங்களிலிருந்து செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப் படடுள்ளது. கச்சத்தீவு செல்பவர்கள் குறைந்தளவு பணம் மட்டுமே கையில் எடுத்துச் செல்லவேண்டும் எனவும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

## சோழர் காலத்து கோயில்



(சிதம்பரம்)

தமிழ்நாடு கடலூர் மாவட்டம் காட்டு மன்னார் கோவிலில் சோழர் காலத்து பழமையும், பெருமையும் வாய்ந்த வீர நாராயணப் பெருமாள் கோயில் பாதுகாப்பு, பராமரிப்பு இல்லாத நிலையிலுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கோயில் முதலாம் பராந்தக சோழன், குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டதாகும்.

இக்கோயிலில் பழங் காலத்து 60 ஐம்பொன் சிலைகள், நகைகள் உள்ளன. இவைகள் விலைமதிக்க முடியாதவை எனக் கூறப்படுகிறது. 2008, 2009 ஆம் ஆண்டுகளில் இக் கோயிலில் உள்ள வெள்ளிக் கிரீடங்கள், பாத்திரங்கள் திருடப்பட்டுள்ளது. இதே வேளை, தமிழ் நாட்டிலுள்ள கோவில்களைப் பராமரிக்கவும் நிர்வகிக்கவும் தனியான பிரிவு ஒன்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## மூவர் கைது

(புதுடில்லி)

டில்லியில் பல முக்கிய இடங்களைத் தகர்க்கவும், முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்யவும் திட்டமிட்டிருந்த லஷ்கர் - இ- தொய்பா பயங்கரவாதிகள் இரண்டு பேர், கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மேலும் ஒருவர் சிக்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தம்பிக்கு பிறந்தநாள் அண்ணன் "அப்சன்ட்"




(சென்னை)

தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் தனது 60 ஆவது பிறந்த நாளை நேற்றுமுன் தினம் கொண்டாடினார். விழாவிற்கு மூத்த சகோதரரும் மததிய அமைச்சருமான அழகிரி செல்லவில்லை.

காலையிலிருந்து கொண்டாட்டங்கள் ஆரம்பமாகி இடம்பெற்றன. அவரது வீட்டில் மனைவி, மகன், மகள், சகோதரி செல்வி உள்ளிட்டோர் முன்னிலையில், "கேக்" வெட்டினார். தொடரந்து, கோபாலபுரம் சென்று, தந்தை கருணாநிதி மற்றும் தாய் தயாளுவிடம் ஆசி பெற்றார்.


ராயப்பேட்டையில் தென் சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். வை.எம்.சி.ஏ மைதானத்தில், பிரமாண்ட பந்தல் போடப்பட்டிருந்தது.

இரண்டு மேடைகள் அமைக் கபபட்டிருந்தன. ஒன்றில் ஸ்டாலினும், மற்றொன்றில் கலைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடந்தது. அன்பர்கள், ஆதரவாளர்கள் ஸ்டாலினுக்கு பிறநத நாள் வாழ்ததுக் கூறினர். இளைய சகோதரியும் எம்.பி.யுமான கனிமொழி கூட, வீட்டுக்குச் செல்லாமல், விழா பந்தலுக்கு வந்து தான் வாழ்த்துக் கூறினார். மூத்த சகோதரரும் மத்திய அமைச்சருமான அழகிரி வரவில்லை. தொலைபேசியில் வாழ்த்துச் சொன்னதாகவும் தகவல் இல்லை எனத் தெரியவருகின்றது.




## வேலை இல்லாத் திண்டாட்டம் குறைந்துள்ளது

(புதுடில்லி)



இந்தியாவில் கடந்த 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தற்போது வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்துள்ளது என மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மல்லிகார்ஜன கார்கே தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்த வேலை வாய்ப்பு குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு, மத்திய அமைசசர் மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில், கடந்த 2004-05 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப் பின்மை 8.3 சதவீதமாக விருந்தது.

தற்போது, இந்த அளவு 6.6 சதவீதமாக குறைந்துள்ளது. சர்வதேச அளவில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்ட போதும், நாம் மேற்கொண்ட வேலை வாய்ப்பு கொள்கையால், இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டம் போன்றவைகளால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்துள்ளது.

வேலை வாய்ப்பை அதிகரிப பதற்காக, 10 இலட்சம் பேருக்கு குறுகியகால பயிற்சி அளிக்கும் திட்டத்தையும், அரசு உருவாக்கியுள்ளது எனத் தெரிவித்தார்.

# 'ஆகாஷ்' இன்று விமானப்படையில் சம்பிரதாயபூர்வமாக இணைகின்றது

(புதுடில்லி)

வானிலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று துல்லியமாக தாக்கும் 'ஆகாஷ்' ஏவுகணை இந்திய விமானப்படையில் சேர்க்கப்படவுள்ளது.

இந்தியாவின் டி.ஆர்.டி.ஓ எனப்படும் இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை சார்பில் ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆகாஷ் ஏவுகணை வடிவமைக் கப்பட்டுள்ளது.

அதன்படி டி.ஏ.எல். எனப் படும் இலகு ரக ஏவுகணையான ஆகாஷ் ஏவுகணை, ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் உள்ள தேசிய அறிவியல், மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணையானது ஆளில்லா விமானங்கள், போர் விமானங்களை தாக்கவல்லது. கப்பல்தளம், ஹெலிகொப்டர், நீர்முழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றிலிருந்தும் ஆகாஷ் ஏவுகணையினை செலுத்தலாம்.

இந்த ஏவுகணை இந்திய விமானப்படையிடம் முறைப்படி இன்று ஒப்படைக்கப்படவுள்ளது. இதற்கான விழாவில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கலந்து கொள்கிறார். இந்த ஏவுகணையினை இந்தியாவின் 'பேட்ரியாட்' என விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.

பேட்ரியாட் என்பது அமெரிக்கா தயாரித்துள்ள ஏவுகணை ஆகும். பேட்ரியாட், கடந்த 1990 ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த வளைகுடாப் போரில் பெருமளவு பயன் படுத்தப்பட்டது.

அந்த ஏவுகணையினை போன்று இந்தியா வடிவமைத்துள்ள 'ஆகாஷ்' இன் செயற்படும் இருக்கும் என்பதால் இந்தியாவின் பேட்ரியாட் எனவும் சீனாவினால் அச்சுறுத்தல் ஏற்பட்டால் எதிர்க்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் இராணுவ ஆயுதம் தயாரிப்பில் இந்த ஏவுகணை ஒரு மைல்கல்லாகும் எனவும் கூறப்படுகிறது.

## தவக்காலச் சிந்தனை



### நமது பகைவருக்காக செபிப்போம்

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியாக அலசி, ஆய்வு செய்து, மாற்றிக் கொள்ள அழைப்பு விடுக்கும் காலம். இன்றைய வாசகம் நம்மைத் துன்புறுத்துவோருடன் நமக்குள்ள உறவை மறு ஆய்வு செய்ய அழைக்கின்றது.

உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் என்கிறார் இயேசு. கிறித்தவ வாழ்வின் மிகப் பெரும் சவால்களுள் ஒன்றாக இது கருதப்படுகிறது. மனித இயல்பை மீறி, இறைத்தன்மைக்குள் இட்டுச் செல்லும் அழைப்பு இது. கடினமான அழைப்பு, ஆனால் முடியாதது அல்ல.

காலம் காலமாக திருச்சபையின் மறைசாட்சிகள், மாபெரும் புனிதர்கள் செய்து வந்த ஒன்றுதான். இயேசுவே சிலுவையில் தொங்கியபொழுது தன் பகையானுக்காகப் பரிந்து பேசி செபித்து நமக்கெல்லாம் பாதை காட்டியிருக்கிறார். எனவே, நாமும் அதைச் செய்யலாம். செய்ய முயற்சிக்க வேண்டும். இத்தவக்காலம் அதற்கான பொருத்தமான காலம். எனவே, நம்மைத் துன்புறுத்துவோரை நினைவுகூர்ந்து, அவர்களுக்காக இறைவனை மன்றாடுவோம்.

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# 1000 ஆட்டுக்குட்டிகளை கடித்து இரத்தம் குடித்த சாமியார்

(திருச்சி)

திருச்சி -புத்தூரில் குழுமாயி அம்மன் கோவிலுள்ளது. திருச்சி அதன் அயல் பகுதிகளின் காவல் தெய்வமாக குழுமாயி அம்மன் உள்ளார். இங்கு குட்டிக்குடித் திருவிழா நேற்று முன்தினம் நடந்தது. ஒண்டிக்கறுப்பு சாமியாக வந்த மருளாளி, 1,000 ஆட்டுக் குட்டிகளைக் கடித்து, ரத்தம் குடித்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்.

இந்தக் கோவிலில், ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் குட்டிக்குடித் திருவிழா வெகு விமரிசையாக நடப்பது வழக்கம். அரக்கன் ஒருவன் தன்னை அடைத்து வைத்து தொந்தரவு செய்வதாகவும், அவனிடமிருந்து தன்னை மீட்க வேண்டும் எனவும், குழுமாயி அம்மன் இரட்டை மலையில் உள்ள ஒண்டிக்கறுப்பு சாமியிடம் முறையிட்டார். அரக்கனிடமிருந்து மீட்டுத் தந்த ஒண்டிக்கறுப்பு சாமியை கௌரவப்படுத்தும் விதமாக, குழுமாயி அம்மன் கோவிலில் சுத்த பூஜை முடிந்த மறுநாள் குட்டிக்குடித் திருவிழா நடத்தப்படுகிறது.

அந்த வகையில், ஒண்டிக்கறுப்பாக வந்த மருளாளி சிவகுமாரை, ஊர்வலமாக பக்தர்கள் தோளில் தூக்கி வந்தனர். மந்தையில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் தயார் நிலையில் இருந்தன. புத்தூர் மந்தையில் உள்ள காசி விசாலாட்சி கோவிலை, மருளாளி சுற்றி வந்து ஆட்டுக் குட்டிகளைக் கடித்து இரத்தம் குடித்துள்ளார்.

# ஹோம்ஸ் நகரிலிருந்து சிரிய கிளர்ச்சியாளர்கள் வெளியேற்றம்



(பாபாஅம்ரோ)

சிரியாவின் ஹோம்ஸ் மாவட்டத்தின் பாபா அம்ரோ நகரிலிருந்து கிளர்ச்சியாளர்களில் பெரும் பலானோர் வெளியேறியுள்ளதாக கிளர்ச்சியாளர்களுடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி பஷார் அல் அஸாட்டின் படைகள் இந்நகரை முற்றுகைக்குள்ளாக்கியபின் கிளர்ச்சியாளர்கள் பெரும் பாலானோர் வெளியேறிவிட்டதாகவும் சிலர் மாத்திரம் தமது சகாக்களின் தந்திரோபாய பின்வாங்கலுக்கு பாதுகாப்பளிப்பதற்காக எஞ்சியிருப்பதா கவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்நகரில் சிக்கியுள்ள பொதுமக்கள் குறித்து உலக நாடுகள் எச்சரித்த பின்னரும் சிரியப் படைகள கடந்த வியாழக்கிழமை ஷெல் தாக்குல் நடத்தியுள்ளன.

சிரியாவின் மூன்றாவது மிகப்பெரிய நகரான ஹோம்ஸை எந்த விலை கொடுத்தேனும் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி அஸாட்டின் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என சிரிய அரசாங்கத்துக்கு நெருக்கமான லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை மனிதாபிமான நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதில் சர்வதேச சமூகம் உள்ளிட்ட அனைவரும் தோல்வி கண்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை சுட்டிக் காட்டியுள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் சிரியாவுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் இறந்த செய்தியாளர்களின் உடல்கள் இன்னும் அதே இடத்தில்

(பாபாஅம்ரோ)

சிரியாவில் யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பாபா அம்ரோ பகுதிக்குள் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் செய்தியாளர் மேரி கொல்வின், பிரெஞ்ச் படப்பிடிப்பாளர் ரெமி ஆச்லிக் ஆகியோரின் உடல்கள் இன்னமும் யுத்தம் நடைபெறும் பகுதிக்குள்தான் உள்ளன. அவர்களது உடலகளை வெளியே கொண்டுவர செய்யப்பட்ட முயற்சிகள் ஏதும் இதுவரை பலிக்கவில்லை எனத தெரியவருகின்றது.

இதே பகுதியில் இருந்து ஸ்பானிஷ் நாட்டுச் செயதியாளர் உயிர் தப்பி வெளியேறியுள்ளார். இவர் கடந்த புதன் கிழமை மாலை சிரிய அரசுக்குத் தெரியாமல் எல்லையைக் கடந்து லெபனான் நாட்டுக்குள் சென்றுவிட்டதாகத் தெரியவருகிறது. அந்தப் பகுதிக்குள் இன்னமும் மீதமாக பிரெஞ்ச் செய்தியாள்ர்கள் இருவர் வெளியே வர முடியாமல் சிக்கிக் கொண்டுள்ளனர். வெளிநாட்டு செய்தியாளர்கள் செய்தி சேகரிப்புக்காக சிரிய அரசின் அனுமதி இல்லாமல் ஊடுருவி மறைநதிருந்தே செய்தி சேகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# ஈரானில் நேற்று நாடாளுமன்ற தேர்தல்



(தெஹ்ரான்)

ஈரானில் நாடாளுமன்றத் தேரதல் நேற்று நடைபெற்றது. ஈரானின் சட்டம் இயற்றும் அமைப்பான மஜிலிஸ் என அழைக்கப்படும் நாடாளுமன்றத்திற்கு 290 உறுப்பினர்களின் இடங்களுக்கு மொத்தம் 3,400 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தன. இதனால் அந்நாட்டின் சில சீர்திருத்த மற்றும் பசுமை இயக்க அமைப்புகள் தேர்தலைப் புறக்கணித்துள்ளன.

இதனால் ஜனாதிபதி நிஜாத்துக்கு ஆதரவு அதிகரிக்கும் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் அந்நாட்டு தலைமை மதகுருவான அயோத்துல்லா அலி கோமெனி வாக்களிப்பதன் மூலம் நேர்மையான தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தேவேளை அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் உட்பட பல்வேறு நாடுகள் இத்தேர்தலை எதிர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# யேசு கிறிஸ்துவின் கல்லறை கண்டுபிடிப்பு


(வோஷிங்டன்)

ஜெருசலேம் பகுதியில் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லறையை அகழ்வாராய்ச்சியாளர்கள் முழுமையாக ஆய்வு செய்துள்ளனர். இது யேசு கிறிஸ்துவின் உடல் வைக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நவீன அடுக்குமாடி வளாகத்தின் அடியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லறை, கி.பி.70ஆம் ஆண்டுக்கு முந்தையதாகக் கருதப்படுகிறது. யேசு கிறிஸ்துவின் தொடக்ககாலச் சீடர்கள் இதை அமைத்திருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'கிரேக்க வாசகம்: கல்லறையில் இருக்கும் சுண்ணாம்புக் கல்லால் ஆன பெட்டியில்' புனித ஜெகோவா விழித்தெழு என்று கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டிருப்பதை ரிமோட் கன்ட்ரோல் கேமரா உதவியுடன் ஆய்வாளர்கள் கணடுபிடித்திருக்கின்றனர். இதேபோன்ற மற்றொரு பெடடியில் பெரிய மீனின் வாயில் மனிதன் சிக்கியிருப்பதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது பைபிளில் கூறப்பட்டிருக்கும் ஜோனா என்கிற தேவதூதரின் கதையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கல்லறைப் பெட்டிகளில் செதுக்கப்பட்டிருக்கும் வாசகம், மீனின் உருவம் ஆகியவை உயிர்த்தெழுதல் என்கிற கிறிஸ்தவ நம்பிக்கையைக் காட்டும் வகையில் அமைந்திருப்பதாக



"லைவ் சயின்ஸ்" பத்திரிகை குறிப்பிட்டிருக் கிறது.

இப்போது ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடும் இந்தக் கல்லறை 1981ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகும். ஆனால், கல்லறைகளைத் தோண்டுவதை எதிர்க்கும் யூதக் குழுக்கள் அதை ஆய்வு செய்வதை எதிர்த்தனர். இதனால், ஆய்வாளர்கள் அந்த இடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் அந்தக் கல்லறை சீலிடப்பட்டு இப்போது இருக்கும் இடத்தில் புதைக்கப்பட்டது. சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தபோரும் அவரைச சேர்ந்தவர்களும் கல்லறையைத் தோண்டியெடுப்பதற்கு அனுமதி பெற்றனர். யூத அமைப்புகளின் கடும் எதிர்ப்பையடுத்து, கல்லறையைத் தோண்டுவதற்குப் பதிலாக தானியக்கக்கட்டுப்பாட்டுக் கருவியின் உதவியுடன் இயங்கும் இயந்திரக் கைகள் பொருத்தப்பட்ட கமராக்களை துளைகள் வழியாக கல்லறைப் பகுதிக்குள் அனுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராசி பலன் மார்ச் 1-15 வரை..

கணிப்பவர் பெருங்குளம் ராமகிருஷ்ணன MCA,MA(Ast)

## கடகம்:

புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் - இயல்பிலேயே தலைமை தாங்கும் பணபுடைய கடக ராசி வாசகர்களே இரண்டாமிடத்தில் செவ்வாய், நான்காமிடத்தில் சனி, ஐந்தில் ராகு, எட்டாமிடத்தில் சூரியன், ஒன்பதாமிடத்தில் புதன், பத்தாமிடத்தில் வியாழன், சுக்கிரன், சந்திரன், பன்னிரெண்டாமிடத்தில் கேது என கோள்களின் இயக்கம் நிலவுகிறது. 12ஆம் திகதி புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி தன வாக்கு குடும்பாதிபதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

தன வாக்கு குடும்ப ஸ்தானம் வலுப்பெற்றிருந்தாலும் தனஸ்தானத்தில் செவ்வாய் உலவுவது சிறப்பில்லை. எனவே குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வாக்கு கொடுப்பதற்கு முன் யோசனை செய்து கொள்ளவும். எனினும் அவர் யோககாரகர் என்பதனால் காரிய வெற்றி மற்றும் பெரும் பொருள் குவியும். எடுத்த செயல்கள், முயற்சிகள் யாவும் இன்னலின்றி முடியும். உடன் இருப்பவர்களால் எற்பட்ட தொல்லைகள் மறையும். சுப காரியங்களில் இதுவரை இருந்த சுணக்க நிலை மாறும்.

விரையஸ்தானாதிபதி புதன் பாக்கியத்திஸ் தானத்தில் உலவுவதால் சில விரையங்களை கொடுக்கத்தான் செய்யும். புதிய வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். வீடு கட்டுவதற்கு இருந்த தடைகள் மாறும். தந்தையின் வியாபாரத்தில் சிறிது கவனம் தேவை. பத்தாமிடத்தில் நிகழும் கிரக சேர்க்கையினால் மிகுந்த நன்மை உண்டாகும். வேலை செய்யுமிடத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

நீதிமன்ற வழக்குகளில் வெற்றி கிட்டும். தொழிலில் எதிர்பாராத வகையில் பெரும் இலாபம் கிடைக்கும்.

கலைத் துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கைவரப் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை.

சந்திராஷ்டம தினங்கள்: இல்லை

பரிகாரம்: ஸ்ரீ துர்க்கையை வழிபடவும். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அருகிலுள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று வாருங்கள்.

## சிம்மம்:

(மகம், பூரம், உத்திரம் 1) எடுத்த காரியத்தில் உறுதியாக இருக்கும் சிம்ம ராசி வாசகர்களே ராசியில் செவ்வாய், மூன்றில் சனி, நான்கில் ராகு, ஏழில் ராசிநாதன் சூரியன், எட்டாமிடத்தில் புதன், ஒன்பதாமிடத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், பத்தாமிடத்தில் கேது என கிரக நாயகர்கள் அமர்ந்துள்ளனர். 12ஆம் திகதி தனவாக்கு குடும்ப இலாபாதிபதி புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி ராசிநா தன் சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

ராசிநாதன் ஏழில் வீற்றிருக்க, ராசியை குரு பார்க்க தள்ளிப் போய்க் கொணடிருந்த சுபநிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறும். பெரும் பொருள்வரவை எதிர்பார்க்கலாம். எட்டாமிடத்தில் உள்ள புதனாலும் ஒன்பதாமிடத்தில் உள்ள கிரக சேர்க்கையாலும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த செல்வம் உங்களிடம் வந்து சேரும். விலகிச் சென்ற சொந்த பந்தங்கள் உங்களிடம் வந்து சேர்வர். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

நான்காம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதாலும், ஒன்பதாமிடத்தில் சந்திரன் சஞ்சரிப்பதாலும் பெற்றோர்களின் ஆரோக்கிய விஷயங்களில் கவனம் தேவை. உடன்பிறப்புகள் இடையே பாசப் பிணைப்பு அதிகரிக்கும். பேசும் பேச்சில் இனிமையும் நளினமும் அதிகரிக்கும். வீர தீர விளையாட்டுகளில் பாராட்டப்படுவீர்கள். பயணங்களினால் ஆதாயம் உண்டு. பிள்ளைகளுக்கு எதிர்பார்த்திருந்த வெளிநாட்டு பயணம் கைகூடி வரும். திருமணக் கனவுகள் நனவாகும்.

ஐந்திற்குரியவர் ஒன்பதில் இருப்பதினால் புகழ் பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டு. அரசாங்க வழக்குகளை சிலர் சந்திக்க வேண்டி வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். வியாபார முன்னேற்றத்தை முன்னிட்டு சிலர் வெளிநாட்டு பயணம் செல்வர். புது முயற்சிகளில் வெற்றி பெற நண்பர்கள் உதவுவர்.

கலைத் துறையில் உள்ளவர்களுக்கு திசை மாறிச் சென்ற வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். மாணவர்களுக்கு படிப்பில் சற்று கூடுதல் கவனம் தேவை.

சந்திராஷ்டம தினங்கள்: இல்லை

பரிகாரம்: செவ்வாய்க்கிழமைகளில் திருமுருகனை வழிபடவும். தினமும் கந்த ஷஷ்டி கவசம் பாராயணம் செய்யவும்.

## கன்னி:

(உத்திரம் 2, 3, 4, ஸ்தம், சித்திரை 1, 2) உழைப்பினை உலகிற்கு சொல்லும் கன்னி ராசி வாசகர்களே இரண்டாமிடத்தில் சனி, மூன்றாமிடத்தில் ராகு, ஆறாமிடத்தில் சூரியன், ஏழில் ராசிநாதன் புதன், எட்டாமிடத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், ஒன்பதாமிடத்தில் கேது, பன்னிரெண்டாமிடத்தில் செவ்வாய் என கிரக நிலவரம் உள்ளது. 12ஆம் தியதி ராசிநாதன் புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

தன விரையஸ்தானமும் சுகஸ்தானமும், குருவின் பார்வையைப் பெறுகின்றன. எனவே பொருள் வரவு நிறைந்திருக்கும். குடும்ப ஸ்தானத்தில் சனி இருப்பதால் குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்சினைகள் வரலாம். எனினும் குரு பார்வை இருப்பதால் உடனடியாக மறையும். மூன்றாம் இடத்தில் ராகு இருப்பதாலும், மூன்றாம் இடத்தை செவ்வாய் பார்ப்பதாலும் உடன் பிறந்தோரிடம் மனக்கசப்பு ஏற்படலாம். எனவே அவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். சுற்றியிருப்பவர்கள் உங்கள் சொல்லை செயலாக்க உங்களுக்கு உதவி புரிவர். வீண் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். குறுகிய பிரயாணமோ நீண்ட பிரயாணமோ எதுவாகினும் கவனமுடன் இருங்கள்.

பூமி யோகம் உண்டு. பழைய வீட்டை புதுப்பிக்கும் எண்ணம் உள்ளவர்களுக்கு உதவிகள் வந்து சேரும். தாய் வழி ஆதரவு அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்யும் சூழல் ஏற்படும். வாகனங்களை பிரயோகப்படுத்தும் முன் சரி பார்த்து பின்னர் உபயோகப்படுத்தவும். இல்லம் தேடி வரும் விருந்தினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஆடை ஆபரணங்களுக்கு செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் நிகழும். தொல்லை தந்தவர்கள் விலகிச் செல்வார்கள். பிரபலங்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

கலை துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்கள் பாராட்டும் பரிசும் பெறுவதற்கு ஏற்ற காலமிது.


சந்திராஷ்டம் தினங்கள்: இல்லை


பரிகாரம்: திருமாலை புதன் தோறும் வழிபடுங்கள். வராஷி தேவியை தரிசனம் செய்யுங்கள்.

(தொடர்ச்சி நாளைய தினமுரசில்)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் சஞ்சிகை - ஒரு கண்ணோட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வரலாறு என்பது இலங்கையின் கல்வி வரலாற்றின் - சிறப்பாக யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றின் தகவல்களஞ்சியம் ஆகும். ஏனெனில் யாழ்ப்பாணத்தின்கல்விப்பாரம்பரியத்தின் மையம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியே என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். இந்த வியத்தகு வரலாற்றை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் சார்பாக, அதன்195ஆம் ஆண்டினை நினைவுகூரும் வகையில் திரட்டப்பட்ட "GLIMPSES OF 195 YEARS OF HISTORY" என்ற சஞ்சிகை பேராசிரியர் ஆர். கே. குகனேசராஜா (கேம்பிரிட்ஸ ஐக்கிய இராச்சியம்) அவர்களை இதழாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதும், பாராட்டக்கூடியதுமான விடயமாகும்.



பழைய மாணவன் திரு. பரராஜசிங்கத்தின் கூற்று, இந்த 195 ஆவது ஆண்டு மலரை வாசிப்பவர்கள் கண்டு கொள்ளப்போகின்ற முடிவே!.

பழைய மாணவர் சங்கம் ஒன்றை நிறுவிய முதலாவது கல்லூரி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பதை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னைநாள் போராசிரியரும், பழைய மாணவனுமாகிய திரு.கே.தெய்வேந்திரராஜா பெருமையுடன் குறிப்பிடப்பட்டது நோக்குதற்குரியது. கல்லூரியை விட்டு விலகியும், கல்லூரி அன்னையின் பாசத்திருந்து விடுபட முடியாது என்பதை முதன் முதலில் சமூகத்திற்கு இவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். 1906 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தில் செயற்குழுவின் விபரம் இணைத்திருப்பது, உண்மையில் இதற்கு இசைவான ஆவணமாகக் கூடக் கருதலாம்.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் மூலையில் அமைந்திருந்த "பெட்டிக்கடை" ஒன்றின் புகைப்படத்தை நோக்கும் எந்த முதியவரும், அன்றைய யாழ்ப்பாணத்தின் ஞாபகம் இனிக்காணமுடியும் என்பது ஏக்கந்தான்!

இந்தச்- சஞ்சிகையில் அடுத்துக் காணப்படும் கட்டுரைத் தொகுப்புக்கள் மிக அவதானமாக, தேவைகருதி இணைக்கப்பட்டவைகளாவே தென்படுகின்றன. நாவலர், பேர்சிவலுடன் இணைந்து கல்லூரியின் வள்ர்ச்சிக்காக செயற்பட்ட பெருந்தன்மை, நாவலர் பற்றிய கட்டுரை முதலில் நினைவூட்டிச்செல்கிறது. "நிலத்தடி நீரும் யாழ். குடாநாட்டின் கால நிலைமாற்றத்தின் விளைவுகளும்" என்ற இதழாசிரியரும் போராசிரியருமான குகணேசராஜாவின் கட்டுரை இன்றைய மாணவருலகம் மட்டுமல்லாது சமூக சிந்தனையாளர்களும் சமூக அக்கறை கொண்டோரும் நிச்சயமாக அறிந்து கொள்ளவேண்டிய விடயங்களைச் சுமந்து வருகின்றது. இன்று இத்தகையவற்றைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும் நாம், இப்படியான பல கட்டுரைகளை தொகுத்து வாசிப்பது, எமது சூழலை அபிவிருத்தி செய்வதில் நன்மை பயக்கும் என்பதை உணரவேண்டும். விசேடமாக புவியியல், விஞ்ஞான



இன்று அவற்றை எவ்வாறு புனரமைப்புச் செய்து, புத்துயிர் கொடுத்து இளைஞர்களின் அவப்பொழுதை தவப்பொழுதாக்கலாம் என்

**திரு. K.C. சிவகுமாரன்**
**ஓய்வு நிலை பிரதி அதிபர்**
**யா/மத்திய கல்லூரி**

பதை இன்றைய கல்லூரிச்சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

'மத்தியதீபம்' என்ற மாணவர் சஞ்சிகையின் புகழ் தமிழ்நாட்டு எழுத்தாளர்களிடையே பரவி இருந்தது என்பது பற்றிய தகவல் சிந்திக்க வேண்டியதே! யாழ்ப்பாண மாணவர்கள் இலக்கியத்தில் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார்கள்! தமிழ் நாட்டில் இருந்து அன்று வெளிவந்த முற்போக்குச் சஞ்சிகையான "எழுத்து" என்பதில் சி.சு.செல்லப்பா என்ற புகழ் பெற்ற எழுத்தாளர் இந்தச் சஞ்சிகை பற்றி குறிப்பிட்டுள்ளார் என்பது இன்

பேராசிரியர் அவர்கள் இந்தத் தொகுப்பை ஒழுங்கு முறையில் சுவாரசியமாகச் சமர்ப்பிப்பதில் பெரு வெற்றி பெற்றுள்ளார் என்பதை இந்த சஞ்சிகை மூலம் யாவரும் அறிந்து கொள்வர். அவரின் கல்லூரிப் பற்றிற்கும், திறமைக்கும் சான்றாகவும் இது அமைந்துவிட்டது.

இந்தச் சஞ்சிகையை அவர் தனது நண்பரும் சிறந்த துப்பாட்ட வீரருமாகிய திரு. டி. கணேசகுமார் அவர்கட்கும் மற்றும் அவருடைய வகுப்பாசிரியை காலஞ்சென்ற எமிலி கிருபைநேசன் றிச்சார்ட் (றிச்சார்ட் ரீச்சர்) அவர்கட்கும் சமர்ப்பணமாகக் கூறியுள்ளார். எத்தனையோ மனிதர்களை இவர் தனது கல்வி உலகில் சந்தித்திருந்தும்கூட அவருடைய நண்பனுக்காக மட்டுமல்ல, அவருக்கு ஆரம்ப வகுப்புக்களில் கல்வி புகட்டிய ஆசிரியைக்காக இதனைச் சமர்ப்பணம் செய்வது இன்றைய ஆசிரியர்கள் சிந்திக்கவேண்டியது! அவரைக்கவர்ந்து இன்றுவரை அவர் மனதில் மிகையாக இடம்பிடித்திருப்பது ஒரு ஆசிரியை என்பது இளம் ஆசிரியர்கள் குறிப்பாக மனதில் கொள்ளவேண்டும். இன்றைய ஆசிரியர்கள் மாணவர்களின் மனதில், தமது நடத்தைகளின் மூலம் இடம் பிடித்து விடலாம் என்பதை கேள்விக்குறியாக்கி விடக்கூடாது. சிறிய வயதில் மாணவர்களின் கணிப்புத் தான் ஒரு ஆசிரியர் பற்றி வாழ்க்கை முழுவதும் அவர்களுக்கு இருக்கும். இதனைத் தெட்டத்தெளிவாக சஞ்சிகையின் ஆசிரியர் சிறப்பாக தெரிவித்திருக்கிறார்.

சஞ்சிகையின் உள்ளே நுழையும் போது ஆலயத்தினுள் செல்லும் போதுள்ள உணர்வே தென்படுகிறது.

"கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய பாதிரியார் டாக்டர் பீற்றர் பேர்சிவலும், ஆறுமுகநாவலரும் முன்வைத்த சிந்தனைகள் யாவும் பூரிப்புடன் வேரூன்றி, யாழ்.குடாநாட்டின் கல்வி வளர்ச்சிக்கும், கலாசார மேம்பாட்டிற்கும், அளப்பரிய அடித்தளமாய் அமைந்து நிற்கின்றன" என்ற கல்லூரியின் வரப்பெற்று புளங்காகிதம் அடைந்து விடுவார்.இந்தக் கடை நீதிமன்றத்தின் முன்னால் அமைந்திருந்தமையால் பகல்நேரங்களில் பிரபல சட்டத்தரணிகள் முதற்கொண்டு, சாதாரண தொழிலாளிகள் வரை நிறைந்தே காணப்படும். அதன் முன்னே போடப்பட்டிருக்கும் ஒரு வாங்கில் உட்கார்ந்து கொண்டு, அன்று இங்கிருந்து வெளியான ஒரே நாளிதழான ஈழநாடு ஒரு கையிலும், பெட்டிக்கடையின் வெறும் தேநீர் மறுகையிலுமாக வைத்துக்கொண்டு எத்தனையெத்தனை சுவாரசியமான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருப்பார்கள். நடந்து முடிந்த கிரிக்கெட் விமர்சனம் முதல், யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்கில் நடந்த செய்திகள் வரை அலசி ஆராயப்படும். இவை யாவும் மிகவும் குதூகலத்துடன் பெட்டிக்கடையின் முன் அரங்கேறிக் கொண்டிருக்கும். எத்தனையோ செய்திகளை இந்தச் சஞ்சிகை பார்க்கும் கணம் எம்முள்ளே கொண்டு வந்து விட்டது! அந்தநாள் ஞாபகம் சுவையானதுதான்! பொது நூல் நிலையம், நீதிமன்றம் பொலிஸ்நிலையம், சுப்பிரமணியம பூங்கா என்ற இன்னோரன்ன பதிவுகளையெல்லாம் சூழக்கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும். கற்பனையில்தான்

மாணவர்களும் ஆசிரியர்களும் இவற்றை வாசித்துப்பயன்பெற வேண்டும். 'ஆனையிறவு ஏரி' பற்றிய தற்போதைய நிலையின் ஆய்வுக் கட்டுரையின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் என்னும் பந்தி மிக உன்னிப்பாக நாம் உற்று நோக்க வேண்டிய விடயமாகும்.

'கலாசாரப்பாரம்பரியம்' என்ற கட்டுரையில் யாழ்ப்பாணத்தின் வரலாற்றிலிருந்து என்றுமே மறந்துவிடமுடியாத ஆங்கிலேயர் ஆட்சி, சென்பீற்றர்ஸ் தேவாலயம், வடக்கின் பெரும் போர் என்னும் கிரிக்கெட் ஆட்டம், மணிக்கூண்டுக்கோபுரம், பொதுநூலகம், சுப்பிரணியம் பூங்கா என்பனவற்றின் பதிவுகள் இன்றைய இளைஞர்கள் வாசிக்கவேண்டியவை. கல்லூரியின் றொமெயின் மண்டபம் இவற்றுடன் தொடர்பான . அரிய வரலாற்றைக் கொணடிருக்கும் என்பதை இத்தொகுப்பு மூலம் உணர்ந்து கொள்ளலாம்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 1959ஆம் ஆண்டுக்குரிய இளம் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழுவினரின் புகைப்படம் இதில் பிரசுரமாகியுள்ளது. விளையாட்டுத் துறைக்கு மட்டுமல்ல இலக்கியத் துறைக்கும் யாழ். மத்தியகல்லூரி செழிப்புச் செய்துள்ள வரலாற்றை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

றைய மாணவர் உலகிற்கும் அவர்களை வழிகாட்டும் ஆசிரியர்களிற்கும் சமர்ப்பணம்!

விளையாட்டுத்துறைப்பகுதியை வாசிக்கும் போது யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத்துறையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விடயங்கள் பல எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

அடுத்து இடம்பெற்றுள்ள அதிபர், ஆசிரியர், துணை ஆளணியினர் பற்றிய தொகுப்பில் முதல் அதிபர் லிஞ்சில் ஆரம்பித்து இன்றைய அதிபர் வரை நீடிக்கிறது. எத்தனை புகழ் பெற்ற பெரியவர்கள் எம் கண்முன் தோன்றிச் செல்கிறார்கள்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் குழந்தைகளான பெருந்தொகையானோர் பல தொழில்துறைகளில் மேலோங்கி உலகின் பல பாகங்களிலும், புகழ்சேர்த்ததை பேராசிரியர் குகனேசராஜா தொகுத்து வழங்கியுள்ளார்.

இன்னும் பல்வேறு வரலாற்றுப் பொக்கிஷங்களையும் தன்னத்தே நிறைத்து, அழகாக பொலிவுடன் காட்சியளிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கலலூரியின் பழைய மாணவர்களின் 195ஆம் வருடத்தை நினைவுகூரும் சஞ்சிகையினை, தற்போது இங்கு கற்றுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு மாணவனும் மட்டுமல்லாது ஆசிரியர்களும், பழைய மாணவர்களும், சமூக நலன் கொண்டோரும் நுணுகி வாசிப்பதன் மூலம் நம்மைச் சேர்ந்த இக்கல்லூரியின் பெருநிலைபற்றி அறிந்து கொண்டு, தொடர்ந்து அதன் புகழை உயர்த்த நாம் என்ன செய்யலாம் எனபதை உணர்ந்து செயற்படவேண்டும்.

"எமது இந்தச் சஞ்சிகை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்கள் விஞ்ஞானம், அரிசியல், சமூகவியல், விளையாட்டுத்துறை என்பவற்றில் அடைந்துள்ள தனித்தன்மையை எடுத்துக்காட்டுகிறது என்ற இதன் ஆசிரியர் உரையின் வாசகங்களை இறுதிவரை கொண்டு செல்வதில் போராசிரியர் உண்மையில் வெற்றியடைந்துள்ளார்.

# மக்களின் அவலங்களை வைத்து அனுதாபம் தேடிய கூட்டமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

மக்களின் அவலங்களைக் காட்டி அனுதாபப் பிழைப்பு நடத்தியவர்கள் இன்று அம்பலப்பட்டுப் போயிருப்பதையே நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, ஆழியவளையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த புதன்கிழமை ஆழியவளை கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் முத்துசாமி ஜேசுதாஸன் தலைமையில் இடம்பெற்றது. இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், போர்க்குற்றம் புரிந்த இந்த அரசை சர்வதேசத்தின் முன் அம்பலப்படுத்தி தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம் அபிவிருத்தி வேண்டாம், எமக்கு அரசியல் உரிமை தான் வேண்டும் எனச் சூளுரைத்து அதனூடாக மக்களின் வாக்குகளைச் சூறையாடிய கூட்டமைப்பினர் மக்களை ஏமாற்றி விட்டார்கள் என்பதுதான் எங்கும் பரபரப்பாக பேசப்படும் விவகாரமாக உள்ளது. அத்துடன் தசரதனுக்கு ஒரு கூனியும் தமிழ்மக்களுக்கு ஒரு கூட்டமைப்பும் என விமர்சனங்களும் எழுந்துள்ளதையும் காணக்கின்றோம்.

இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் எமக்கு உள்ள இணக்க அரசியலினூடான செயற்பாட்டிலேயே எமது அழிவடைந்த பிரதேசங்களைக் கட்டியெழுப்பி வருகின்றோம். அதன் ஒரு பகுதியாகவே ஆழியவளையில் 19 இலட்சம் ரூபா செலவில் பொது நோக்கு மண்டபத்தினையும் அதனுடன் இணைந்த கிராமசேவகர் அலுவலகத்தையும் தாதி மருத்துவர் அலுவலகத்தையும் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியுள்ளோம்.

இது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடாகும். இக்கட்டடம் ஜூலை மாதத்திற்குள் கட்டி முடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆழியவளைக் கிராமத்தின் பொதுத் தேவைகளுக்கான கட்டட வசதி பூர்த்தியாகின்றது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் ஆழியவளை சீ.சீ.த.க பாடசாலையின் மாணவர்கள் இருந்து கல்வி கற்பதற்கு தளபாடத்திற்கென எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி வழங்கியிருந்தார். அத்துடன் ஆழியவளை கலைவாணி சனசமூக நிலையத்திற்கு தளபாடத்திற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கியிருந்தார்.

இவ்வாறு எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றார். தற்போது மண்டலாய்ப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் பாதை புனரமைப்பதற்கு கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. அதனையும் அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று சீரமைப்பதற்கு ஆவன செய்யவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.



# பொன்சேகா விடுதலைக்காக புதிய நிர்வாகக் குழு தெரிவு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான இயக்கத்தின் முந்தைய நிர்வாகிகளால் நிதித் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து அவ்வியக்கத்தை நிர்வகிப்பதற்காக புதிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



முந்தைய நிர்வாகக் குழுவினர் மீது நிதி கையாளல் உட்பட பல குற்றச்சாட்டுகள் இருந்ததாக மேற்படி இயக்கத்தின் இணை ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார். இதனால் அனோமா பொன்சேகா தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதன் இணை ஏற்பாட்டாளராக வண. தம்பர அமில தேரரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மூதூரிலிருந்து யாழிற்கு இ.போ.ச. பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

மூதூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புதிய பஸ் சேவை ஒன்றை மூதூர் இ.போ.ச. டிப்போ கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பித்துள்ளதாக மூதூர் இ.போ.ச. டிப்போ செயற்பாட்டு முகாமையாளர் பி.எம்.மன்சூர் தெரிவித்துள்ளார்.

தினமும் காலை 7 மணிக்கு கிளிவெட்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் பேருந்து 7.30 க்கு மூதூரையடைந்து அங்கிருந்து காலை 9.30 மணிக்கு திருகோணமலையை வந்தடையும் அங்கிருந்து வவுனியா ஊடாக பி.ப. 4.00 மணியளவில் யாழ்ப்பாணத்தை சென்றடையும்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து தினமும் காலை 6.30 மணிக்கு புறப்படும் பேருந்து வவுனியா, திருகோணமலை, மூதூர் ஊடாக பி.ப. 3.30 மணிக்கு கிளிவெட்டியைச் சென்றடையும். யாழ்ப்பாணம் - மூதூர் பாவனைக்கு இரு வழிச் சேவைகளையும் இ.போ.ச. டிப்போ நடத்தி வருகின்றது. (116)

# முன்னாள் எம்.பி. மீது விசாரணைகள் பூர்த்தி

(கொழும்பு)

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தருமான திருமதி பத்மினி சிதம்பரநாதன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் காலை மூன்று மணிநேரம் விசாரணைக்குள்ளாக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தலைமையகத்தில் விசாரணை ஒன்றுக்காக நேற்று காலை ஆஜராகுமாறு பொலிஸ் தலைமையகத்திலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பாணையை அடுத்து நேற்றுக் காலை பயங்கரவாத தடுப்புப் பிரிவின் அலுவலகத்தில் அவர் ஆஜராகியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தரணி ஒருவருடன் அவர் சென்றிருந்த போதும் சட்டத்தரணி உள்ளே அனுமதிக்கப்படவில்லை. பத்மினி தனியாகவே உள்ளே கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டார். காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையில் சுமார் மூன்று மணிநேரம் விசாரணைகள் இடம்பெற்றதாகவும், விசாரணையின் போது அவர் கௌரவமாக நடத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசனின் மரணச்சடங்கு இடம்பெற்ற போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பத்மினி சிதம்பரநாதன் எவ்வாறு வன்னி சென்று வந்தார், அவருடன் வந்தவர்கள் யார், எந்த வாகனத்தில் அவர் சென்று வந்தார் போன்ற விபரங்களே விசாரணையாளர்களால் கேட்கப்பட்டதாகத் தெரிகின்றது.

வன்னிப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது 2008 ஆம் ஆண்டில் கிளைமோர் தாக்குதல் ஒன்றில் சிவநேசன் கொல்லப்பட்டிருந்தார். அவரது இறுதிச் சடங்குகள் வன்னிப் பகுதியிலேயே இடம்பெற்றன.

## கூட்டமைப்பு...

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தொடர் சம்பந்தமாக நீண்ட கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. இதில் பங்குபற்றுவதில்லை என்று உறுதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தொடரில் நடைபெறும் அனைத்தையும் உன்னிப்பாக கவனிக்கின்ற அதேவேளை, தமிழ் மக்களின் நலன் சார்ந்த சகல நடவடிக்கைகளையும் தொடர்ந்தும் முன்னெடுப்பதாகவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## இன நல்லிணக்கமின்றி....

இது சம்பந்தமான செயற்பாடுகள் குறித்து, சர்வதேச சமூகம் கடந்த மூன்று ஆண்டுகளாக எதிர்பார்ப்புகளை கொண்டிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதி காலத்தில் இருந்து சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமெரிக்கா இலங்கையுடன் செயற்பட்டு வந்துள்ளது எனவும் ஒட்டேரோ தெரிவித்துள்ளார்.

அதேபோல் இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் எனவும் ஒட்டேரோ குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையுடன் இராணுவ தொடர்புகளை மேலும் அதிகரிக்க சீனா விருப்பம்

இலங்கை மற்றும் சீனா ஆகிய இருநாட்டு இராணுவங்களுக்கிடையில் தொடர்புகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இலங்கையில் இடம்பெற்றுவரும் அபிவிருத்தி, சமாதான முயற்சிகள் மற்றும் நாட்டின் இறைமையினைப் பாதுகாப்பதற்கு சீனா தனது முழு ஆதரவையும் வழங்கும் என்று சீன பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லி லியாங்கை, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் சீனா சென்று கலந்துரையாடியபோதே இதனை அவர் தெரிவித்தார்.

இருவருக்கிடையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போதே சீன பாதுகாப்பு அமைச்சர், இவ் உறுதிப்பாட்டை வழங்கியுள்ளதாகவும் சீனாவின் அடிப்படை நலன்களில் இலங்கையின் ஆதரவுக்கு நன்றியைத் தெரிவித்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது.

இலங்கை - சீனாவின் நட்புறவு இராஜதந்திர ரீதியாக சீராக விருத்தியடைந்து வருவதாகவும் இந்நிலையில், இரு நாட்டு இராணுவங்களுக்கும் இடையில் தொடர்புகளை அதிகரிக்கவும், நட்புறவு என்பவற்றை உறுதி செய்யவும் இலங்கையுடன் ஒத்துழைக்க சீனா விரும்புவதாக லியாங் குறிப்பிட்டுள்ளார்.

சீன - இலங்கை உறவுகள் எப்போதும் மிக ஆரோக்கியமாக இருக்கும் எனவும் சீனாவின் ஆதரவுக்கு நன்றியையும் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# வடக்கின் சனத்தொகை மதிப்பீடு அறிக்கை ஜெனிவாவில் விநியோகம்



உண்மை நிலைமையை தெளிவுபடுத்துவதற்காக வடக்கின் தொகை மதிப்பீட்டு அறிக்கையை ஜெனிவாவில் அங்கத்துவ நாடுகளிடையே பகிர்ந்தளித்து அறிவூட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலான உண்மை நிலைமையை தெளிவுபடுத்துவதற்காக வடக்கில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டு அறிக்கையை ஜெனிவாவில் அங்கத்துவ நாடுகளிடையே பகிர்ந்து தனித்து அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான தவறான குற்றச்சாட்டுகள் மற்றும் தெளிவின்மை என்பவற்றுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் எமது தூதுக்குழு அறிவூட்டி வருகிறது. வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் அங்கு சுயாதீனமாக தகவல்கள் திரட்டப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1981 இன் பின் நடந்த இந்த புள்ளி விபரங்களின் மூலம் காணாமல் போனதாகவும் கொல்லப்பட்டதாகவும் கடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. 40 ஆயிரம் பேர் இறுதிக் கட்ட யுத்தத்தில் இறந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டாலும் 2009 ஜனவரி முதல் மே மாதம் வரை சுகவீனம் முதுமை உட்பட பல்வேறு காரணங்களினால் 8998 பேரே இறந்துள்ளனர்.

இப்பகுதியில் 90 சதவீதத்திற்கு மேல் கல்வி நடவடிக்கை நடைபெறுகிறது. 481 குடும்பங்கள் மட்டுமே மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளது. இந்த விடயங்கள் குறித்து ஜெனிவாவில் ஏனைய நாடுகளை அறிவூட்டி வருகிறோம் என்றார்.

## எயிட்ஸ்....

அதிகம் பேர் உள்ளனர் என்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் என். எதிரிசிங்க சுட்டிக்காட்டினார்.

## கச்சதீவு...

பிரதேச சபையின் தவிசாளர் ரஜீவ் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்தும் அதிகளவான பக்தர்கள் இங்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (85)

# ஜெனிவா கூட்டத்தொடரின்போது அணிசேரா நாடுகள் இலங்கைக்கு ஆதரவு

(ஜெனிவா)

அணிசேரா நாடுகள் ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளதாக பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை தோற்கடிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அணிசேரா நாட்டு அமைப்புடன் கிரிகிஸ்தான், கியூபா, ஈக்குவடோர், ரஷ்யா என்பன உறுதியளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் முன்னெடுக்க திட்டமிட்டுள்ள மனித உரிமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்திட்டங்கள் குறித்தும் இலங்கைத் தூதுக்குழு நேற்று முன்தினம் முக்கிய கூட்டமொன்றை ஜெனிவாவில் ஒழுங்கு செய்திருந்ததாக பிரதி அமைச்சர் கூறினார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவை மாநாட்டின் ஆரம்ப அமர்வுகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன. இங்கு உரையாற்ற பல நாடுகளுக்கு அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. கியூபா மற்றும் கிர்கிஸ்தான் வெளிவிவகார அமைச்சர்களும் ரஷ்ய பிரதி வெளிவிவகார அமைச்சரும் மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக உரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அணிசேரா நாடுகளின் கூட்டமொன்று எகிப்தின் தலைமையில் அங்கு இடம்பெற்றது. இங்கு இலங்கைத் தூதுக்குழுவின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. அமெரிக்காவின் முயற்சியை அணிசேரா நாடுகள் தோற்கடிக்க வேண்டும் என இங்கு கியூபா யோசனையொன்றை முன்வைத்தது. இதனை ஈக்குவடோர் ஆமோதித்தது. மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

## தற்காலிக அடையாள அட்டை முல்லையில் விநியோகம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச சபை தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளதாகவும் இந்த தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுரைப்பற்று ஆகிய இடங்களில் இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, வாக்காளர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயம் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைதீவு தேர்தலில் வாக்காளர் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும்போது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதிய அட்டை, முதியோர் அட்டை, மதகுருமார்களுக்காக ஆட்பதிவு திணைக்களம் விநியோகித்துள்ள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை எடுத்துச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பொதுக்கூட்டம்

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொதுக் கூட்டமும், நடப்பாண்டிற்கான நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறும் சங்க அபிவிருத்தி சம்பந்தமாக ஏதாவது பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பினால் 5ஆம் திகதிக்கு முன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் எஸ்.சுவேந்திராவிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (116)

## கல்விக்கான நிதி போதாது

(கொழும்பு)

ஒரு நாட்டின் சமயங்களை விட அதிமுக்கியத்துவம் அறிவுக்கும், கல்விக்கும் வழங்கப்படுகின்றன. எவ்வாறான கஷ்டங்களை எதிர் நோக்கினாலும் பல நாடுகள் தமது தேசிய வருமானத்தில் கல்விக்கே அதிகளவான நிதியை ஒதுக்கிவருகின்றன என இலவச கல்வியை வழங்கும் தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், கியூபா 8.5 வீதத்தையும், அமெரிக்கா 5.6 வீதத்தையும் இந்தியா 4.1 வீதத்தையும் கல்விக்காக ஒதுக்குகின்றன.

மேலும், காலநிலை மாற்றம் மற்றும் அதிகமான வறுமையை சந்தித்துவரும் எத்தியோப்பியாவே 4.8 சதவீதம் கல்விக்காக நிதியை ஒதுக்குகின்றது. இலங்கை குழந்தைகளின் கல்விக்காக வெறும் 1.8 சதவீத நிதியையே ஒதுக்கப்படுகின்றது என்றார்.

## புதுக்குடியிருப்பில் ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட சோதனையின் போது புலிகளுக்குச் சொந்தமான வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன. குண்டுகள்- 14, கைக்குண்டுகள் – 05, 81 மி.மீ மோட்டார குண்டுகள் -13, ஆரி.ஜி.ரக குண்டுகள்-08 உட்பட மேலும் பல வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## 5 மீனவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் ஐவருடன் பயணித்த படகொன்று இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. திருகோணமலையில் இருந்து தொழிலுக்காக சென்ற மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிடுகிறது.

எல்லையை மீறியதன் காரணமாக கடந்த 28 ஆம் திகதி ஆந்திரா பிரதேசத்தில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## சுகநல சேவை கண்காட்சி



தேசிய சுகநல சேவை கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று ஆரம்பமான்து. இக்கண்காட்சியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியாரும் முதற்பெண்மணியுமான ஷிராந்தி ராஜபக்ஷ ஆரம்பித்துவைத்தார். நாளையும் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.

## முன்பள்ளி கல்வி டிப்ளோமா 80 ஆசிரியர்களுக்கு பரீட்சை

(வடமராட்சி)

வடமராட்சிக் கல்வி வலயத்திற்கான முன்பள்ளி கல்வி டிப்ளோமா இறுதித் தேர்வு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. பரீட்சை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் 11.00 மணி வரையும் 11.15 மணி தொடக்கம் 1.15 மணிவரையும் பரீட்சை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை குழந்தை உளவியில் பாடமும் மாலை இசைவும் அசைவும் செய்முறையும் 11 ஆம் திகதி காலை கணித எண்ணக்கரு விருத்தி பாடமும் மாலை நாடகமும் செய்முறையும் 17 ஆம் திகதி காலை விஞ்ஞானமும் மாலை சித்திரமும் கைவேலையும் 18 ஆம் திகதி காலை முன்பள்ளி கல்வித் தத்துவம் பாடமும் மாலை முன்பள்ளி முகாமைத்துவம் என்ற பாடமும் இடம்பெறும்.

24 ஆம் திகதி காலை மொழித்திறன் விருத்தி பாடமும் மாலை மதிப்பீட்டு முறையியல் பாடமும் 25 ஆம் திகதி காலை சுற்றாடலும் மாலை வகுப்பறை முகாமைத்துவம் என்ற பாடமும் 31ஆம் திகதி காலை முன்பள்ளி கல்விக்கான ஆங்கிலம் என்ற பாடமும் நடைபெறும்.

இந்த முன்பள்ளி கல்வி டிப்ளோமா இறுதித் தேர்வுக்கு 80 முன்பள்ளி ஆசிரியர்கள் தோற்றவுள்ளனர். ஆசிரியர்கள் அனைவரும் ஆள் அடையாள அட்டையை உறுதிப்படுத்தி உரிய நேரத்திற்கு மண்டபத்திற்கு வருகைதருமாறு வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் அறிவித்துள்ளார். (116)

## ஜனாதிபதி - பேராயர் குழு சந்திப்பு



கொழும்பு பேராயர் பேரருட்திரு கருதினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை தலைமையிலான விஷேட பிரதிநிதிகள் குழுவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான விஷேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

நீர்கொழும்பு மற்றும் சிலாபம் பிரதேச மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பான தீர்வொன்றை எடுக்கும் நோக்கில் இந்த விஷேட சந்திப்பு நடைபெற்றது.

அருட் தந்தைகளான வெலன்ஸ் மெண்டிஸ் - பெட்ரிக் பெரேரா – கிறிஸ்டஸ் குலுகுலசூரிய – லெஸ்டர் நோனிஸ் மற்றும் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ ராஜித்த சேனாரத்ன, மில்ரோய் பெர்னான்டோ பீலிக்ஸ் பெரேரா உட்பட அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.





கச்சதீவு அந்தோனியார் கோயில் திருவிழாவை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் வேலணைபிரதேச சபை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபை, கடற்படை இணைந்து கச்சதீவு கோயில் பெருநாளில் கலந்துகொள்ள வரும் அனைத்து மக்களுக்கும் தேவையான ஏற்பாடுகளையும் செய்துவருகிறது. கடற்படையினர் இறங்குதுறைமுகம், மலசலகூட வசதிகளையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இலவசமான உணவு ஏற்பாடுகளையும் வழங்குவதோடு, நேற்றைய தினம் இறங்குதுறை அமைக்கப்படுவதையும், குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதையும் காணலாம். (படப்பிடிப்பு - செந்தூரன்)

## மரண அறிவித்தல்

### கந்தன் கிருஷ்ணபிள்ளை

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்சுவேலிப் பிராந்திய இணை அமைப்பாளரும் வலி. கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினருமான லிங்கேஸ் தோழரின் (கிருஷ்ணபிள்ளை செல்வராசா) அன்புத் தந்தையார் நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர்,
யாழ்ப்பாணம்.

(இ)

தகவல்:
லிங்கேஸ் தோழர்
(கிருஷ்ணபிள்ளை செல்வராசா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.